Registered as a News paper in Ceylon

விலை சதம் 15

# ஈழநாடு

EELANADU

National Tamil Daily

தபால்பெட்டி எண்: 49
போன்: 389

மலர் 10
இதழ் 361
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் தை 26 ஜுலக: 20 சனிக்கிழமை [8-2-69]

குடும்ப பெண்களுக்கு
ஓர் நற்செய்தி



நீங்கள் பாவிக்கும் அண்ணு கோப்பி No. 1 வெற்றுப் பெட்டிகளில் 20 சேர்த்து தருபவர்களுக்கு ஓர் கப் அன் சோசர் இனுமாகக் கொடுக்கப்படும்.

அண்ணு
இன்டஸ்றி
இணுவில்.

# பேராதனைப் பல்கலைக்கழக உபவேந்தர் பதவி துறந்தார்

## ராணுவம்-பட்டதாரிமாணவர் மோதல் எதிரொலி

கொழும்பு,சனி

**பேராதனை பல்கலைக்கழக உபவேந்தர் திரு. என். ஜே. பெரேரா நேற்று தமது பதவியை துறந்தார்.**

**பேராதனை பல்கலைக்கழக மாணவர்களுக்கும் ராணுவத்தினருக்குமிடையில் நடந்த கைகலப்புச் சம்பவங்களைத் தொடர்ந்தேஇவர் தமது பதவியை ராஜினுமாச் செய்துள்ளார்.**

**பல்கலைக்கழக ஆட்சிக்குழுவிடம் தம்மீதான புகார்களுக்கு விளக்கம் ஒன்றையும் நேற்று ராஜினுமாவுடன் சமர்ப்பித்தார். இதன்பின்னர் பிரதமர் டட்லி சேனநாயகாவையும் அவர் சந்தித்துப் பேசினுர்.**

பல்கலைக்கழக ஆட்சிக்குழு திரு. பெரேராவின் ராஜினுமாவை வாபஸ் பெறும்படி கேட்டுக்கொண்டிருக்கிறது. அவர்மீது ஆட்சிக்குழுவுக்கு பூரண நம்பிக்கை இருப்பதாகவும் ராஜினுமா பற்றி மறு பரிசீலனை செய்யும்படியும் அவரைக் கேட்டுக்கொண்டுள்ளது. திரு. பெரேரா இதுபற்றி எவ்வித அபிப்பிராயமும் வெளியிடவில்லை.

பல்கலைக்கழக ஆட்சிமன்றக் குழுவிடம் திரு. என். ஜே. பெரேரா சமர்ப்பித்துள்ள நீண்ட விளக்கத்தில், பல்கலைக்கழக வளவுக்குள் ராணுவத்தினரை தங்குவதற்கு அனுமதிக்கும் போது, சில நிபந்தனைகளுடனேயே அனுமதித்ததாகவும், உள் விளையாட்டரங்கில் மட்டுமே தங்குவதற்கு ராணுவத்தினர் அனுமதிக்கப் பட்டதாகவும் தெரிவித்துள்ளார்.

''ராணுவத்தினர் பல்கலைக்கழக வளவுக்குள் அனுமதிக்கப் படுவதற்கு முன்னர் இது சம்பந்தமாக ராணுவ கமாண்டருடன் பேசினேன். அவருக்கு நிபந்தனைகளையும் விதித்தேன்.

அத்துடன் ராணுவத்தினர் பல்கலைக்கழக மாணவர்களுடன் சினேக முறையில் பழகியுள்ளனர். இப்படி அவர்கள் நடந்திருக்கக் கூடாது'' என்றும் தமது விளக்கத்தில் திரு. என். ஜே. பெரேரா குறிப்பிட்டுள்ளார்.

'நிலைமையைச் சமாளிப்பதற்காகவே 10 நாட்கள் பல்கலைக் கழகத்தை மூடினேன்' என்றும் தெரிவித்துள்ளார்.

சுதந்திர தினத்துக்கு முதல்நாள் பல்கலைக்கழக வளவில் ராணுவத்தினருக்கும் சில பல்கலைக்கழக மாணவருக்குமிடையில் நடந்த கைகலப்பு சம்பந்தமாக எதிர்க்கட்சியினர் ஆட்சி மன்றத்தில் பல்கலைக் கழக நிர்வாகத்தினர் மீது கடுமையான குற்றஞ் சாட்டியதைத் தொடர்ந்தே இவர் ராஜினுமாச் செய்துள்ளார்.

## யாழ். நகர் நவீன மார்க்கட் வேலை

### அடுத்தமாதம் ஆரம்பமாகும் என மேயர் அறிவிப்பு

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணம் நவீன மார்க்கட்டின் கட்டடவேலைகள் அடுத்தமாதம் ஆரம்பமாகுமென்று யாழ்ப்பாண மேயர் திரு, எஸ். நாகராசா இன்றுகாலை தெரிவித்தார்.

இம்மாதம் 10-ந் தேதி நடைபெறவிருக்குமாநகர சபைக் கூட்டத்தில், நவீன மார்க்கட் சம்பந்தமான விஷயங்கள்பற்றி முடிவு செய்யப்படுமென்றும் அவர் தெரிவித்தார்.

நேற்று பெரியகடையில் உள்ள கடை உரிமையாளர்களைக் கொண்ட ஒரு மகாநாட்டை மேயர் கூட்டினுர். கஸ்தூரியார் வீதியில்பழைய பஸ்நிலையத்திற்கு எதிரே உள்ள கடைகளை இம்மாதம் 19-ந் திகதி காலி செய்யவேண்டுமென்றும் கடைச் சொந்தக்காரர்களுக்கு மகாநாட்டில் தெரிவிக்கப்பட்டது. கடைகளை காலிசெய்வதற்கு கடை உரிமையாளர்கள் சம்மதம் தெரிவித்தனர்.

கடைகளை காலிசெய்யாதவர்களுக்கு, புதிய கடைகள் வழங்கப்படாதென்றும் மகாநாட்டில் தெரிவிக்கப்பட்டது.

புதியகடைகளுக்கு மாதம் 80ரூபாவாடகை செலுத்தப்படவேண்டுமென்றும், கடந்த வருடம்மே மாதம் முதல் வாடகைப்பணம் செலுத்தப்படவேண்டுமென்றும் அறிவிககப்பட்டுள்ளது.

### அட்டோர்னி ஜெனரல் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம்

## எதிர்க்கட்சியினரின் ஆதரவு வேண்டும்

### சாவகச்சேரி எம். பி. யோசனை

கொழும்பு வெள்ளி

அட்டோர்னி ஜெனரல் திரு. ஏ.சி. எம். அமீருக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானமொன்றைக் கொண்டு வருவது சம்பந்தமாகவும் அதற்கு தமிழரக் கட்சி எதிர்க்கட்சியின் ஆதரவை பெறவேண்டுமென்றும் சாவகச்சேரி எம்.பி. திரு. வி; என்.நவரத்தினம் நேற்று தமிழரசுக் கட்சிஆட்சிமன்ற குழுக் கூட்டத்தில் கோரினுர். கொழும்பில் குழுக் கூட்டம் கூடி பலபிரச்னைகளைப்பற்றி ஆராய்ந்தது.

வடபகுதியில் சமீபத்தில் நடந்த ஒரு கொலை சம்பந்தமாக ஆராய்வதற்கு ஆட்சிமன்றத் தெரிவுக் குழுவொன்றை நியமிக்க வேண்டுமென அரசாங்கத்தைக் கோருவதென்றும் இதற்கு மறுப்புத் தெரிவிக்கப்பட்டால் அட்டோர்னி ஜெனரல் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவர வேண்டுமென்றும், இதற்கு எதிர்கட்சியினரின் ஆதரவைத் தேடிக் கொள்ள வேண்டுமென்றும் சாவகச்சேரி எம். பி. தமிழரசுக் கட்சி ஆட்சிமன்ற குழுக் கூட்டத்தில் வற்புறுத்தினுர்.

இதுசம்பந்தமாக கூட்டத்தில் எவ்வித முடிவும் எடுக்கப்படவில்லை.

## உப ஜனுதிபதி அனுதாபம்

சென்னை, பெப்,8

இந்திய உப ஜனுதிபதி திரு. பி. வி. கிரி இன்று நுங்கம்பாக்கிலுள்ள அமரர் அறிஞர் அண்ணுதுரை இல்லத்துக்கு சென்று திரு மதி ராணி அம்மையாருக்குத் தமது அனுதாபத்தைத் தெரிவித்தார்.

பண்டத்தரிப்பு

## பட்டினசபை கோரிக்கை

சங்கானை, வெள்ளி

அண்மையில் பண்டைத்தரிப்பு பட்டினசபைக்கு வருகைதந்த உள்ளூராட்சி அமைச்சர் திரு. ஆர்.பிரேமதாசாவிற்கு மேற்படி பட்டினசபைத் தலைவர் திரு. இ. செல்வரத்தினம் உபசாரப்பத்திரம் ஒன்றை வாசித்துக் கையளித்தார். அமைச்சரின் கவனத்திற்கு பட்டினசபையினரால்சமர்ப்பிக்கப்பட்ட முக்கிய தேவைகள் பின்வருவன:

யாழ். மாவட்டத்திலுள்ள சிறந்த சந்தைகளில் பண்டைத்தரிப்பும் ஒன்று. இங்கு பொருள் கொள்வோர் விற்போர் அடிப்படை வசதிகளை அனுபவிக்கக்கூடிய வகையில் நவீனசந்தை ஒன்றை அமைத்துத்தரல். புதிதாக ஆரம்பிக்கப்பட்ட பட்டினசபைக்கு இடமின்மையால் காணியும் பொருத்தமான அலுவலகமும் அமைத்துத் தரல்.

பொதுசன நூல்நிலையம் இல்லாத பட்டினசபை எல்லைக்குள் இயங்கிவரும் இரண்டு மகாவித்தியாலயங்களிலும் கல்வி கற்கும் உயர்நிலை வகுப்பினர்குரிய பொருத்தமான நூல்நிலயப் பிரிவுகள் இல்லாமையால் புதிதாகஅமையவிருக்கும் அலுவலகத்துடன் பொதுசன நூல்நிலையம் ஒன்றை அமைத்தல்.

விவசாயம், மீன்பிடித் தொழில் உணவு விஸ்தரிப்பிற்கு வழிகோலும் பட்டினசபை எல்லைக்குள் இருக்கும், முல்லையடி தங்கட வாசல் வீதி, கீரிமலை வீதி, சாந்தை வீதி வடலியடைப்பு சங்கானை வீதி

(8-ம்பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### தேவை

மின்தொழில் ஸ்தாபனத்தில் உதவியாளராக சேர்வதற்கு ஆர்வமுள்ள இளைஞர் தேவை. சிறு தொகை பிணைப்பணம் கட்டக்கூடிய நல்லொழுக்கமுடையோர் விபரங்களுடன் விண்ணப்பிக்கவும். விளம்பர இலக்கம் 659, 'ஈழநாடு' மேற்பார்த்து. 659

### SALE

Clearance Sale Electrical Accessories, appliances and Radio Spares at reduced prices. Autos Ltd., Jaffna. 660

### விற்பனைக்கு

ஒலி பெருக்கியும், உபகரணங்களும், நல்ல நிலைமையில் உள்ளது விற்பனைக்குண்டு விலாசம் செ. விமலேந்திரன், நா. தியாகராசா மேற்பார்த்து சங்கானை மேற்கு, பண்டைத் தரிப்பு. 661

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**


## பாலம் அவசிய

உடுப்பிட்டி, வெள்ளி

'சிலும்பிளாட்டி வீதியில் ஒரு பாலம் அமைக்கவேண்டியது அவசியம். இதனால் உணவு உற்பத்தியை விஸ்தரிப்பதற்கும், அந்தணத்திடல், கப்புதூவிலுள்ள மக்களுடன் தொடர்புகொள்வதற்கும் வசதியாக இருக்கும். இப்பாலத்திற்குப் 'பிரேமதாசா பாலம்' எனப் பெயரிடச் சம்மதமளிக்க வேண்டும்.'

இவ்வாறு கோரும் மகஜரொன்றைக் கரவெட்டி மேற்கு கிராம முன்னேற்றச் சங்கம் உள்ளூராட்சி அமைச்சர் திரு. ஆர். பிரேமதாசாவிடம் வழங்கியுள்ளது.

அம்மகஜரில் கரவெட்டிக்குத் தெற்கே உள்ள உப்பளம் வீதியை அடுத்துக் குடியேற்றத் திட்டமொன்று நிறுவவேண்டுமென்றும், பொது விளையாட்டு மைதானம் பெற்றுத்தரவேண்டுமென்றும், நெல்லியடிப் பட்டினசபை விசேஷ ஆணையாளர் ஆட்சி முறையை நீக்கி, ஜனநாயக ஆட்சி முறையை மீண்டும் நடைமுறைக்குக் கொண்டுவர வேண்டுமென்றும் கோரப்பட்டுள்ளது.

# உள்ளூராட்சி மன்றங்களில் இருநியமனஅங்கத்தவர்கள்

## அமைச்சரிடம் தெரிவிக்கப்பட்ட யோசனை

உடுப்பிட்டி, வெள்ளி

"ஒவ்வொரு மாவட்டங்களிலும் கைத்தொழில் பேட்டைகளை நிறுவுவது. போல உள்ளூராட்சி மன்றங்கள் மூலம் அவ்வப்பகுதிகளில் சிறு கைத்தொழில் நிலையங்களை அமைக்கவேண்டும். இச்சிறுகைத்தொழில் நிலையங்கள் மூலம் குடிசைக் கைத்தொழில்களை ஊக்குவிப்பதோடு படித்த வேலையற்ற வாலிபர்களுக்கு வேலை வாய்ப்பும் கிடைக்கும்."

இவ்வாறு உடுப்பிட்டித் தமிழ்மன்றம் நெல்லியடிக்கு விஜயம் செய்த உள்ளூராட்சி அமைச்சர் திரு ஆர் பிரேமதாசா விடம் சமர்ப்பித்த மகஜரில் யோசனை கூறப்பட்டுள்ளது. இம்மகஜரை உடுப்பிட்டித் தமிழ் மன்றத் தலைவர் டாக்டர் திரு. ஆ. திருச்சிற்றம்பலம் அமைச்சரிடம் வழங்கினார்.

அம்மகஜரில் கூறப்பட்டுள்ள சில கோரிக்கைகள் வருமாறு:

உடுப்பிட்டித்தொகுதியில் சுமார் பதினைந்துக்கு மேற்பட்ட விளையாட்டுக்கழகங்களும் பல கிராம முன்னேற்றச் சங்க, சன சமூக நிலையங்களும் இருக்கின்றன. இப்பகுதியே வடபகுதியில் விளையாட்டுத்துறையில் முதலிடம் வகித்து வருகின்றது. இங்குபோதிய வசதிகளுள்ள விளையாட்டு மைதானமொன்றுஇல்லாததால் விளையாட்டு வீரர்கள் கஷ்டப்படுவதோடு, விளையாட்டிலுள்ள ஆர்வமும் குறைந்துவருகின்றது. ஆதலால் உடுப்பிட்டித் தொகுதியில் நவீன வசதிகளுடன் கூடிய ஒரு பொதுவிளையாட்டு மைதானம் நிறுவவேண்டியது அவசியமாகும்.

உள்ளூராட்சிமன்ற சபைகளில் தேர்தல்கள் மூலம் தெரிவு செய்யப்படும் அங்கத்தவர்களை விட இருநியமன அங்கத்தவர்கள் கட்சிச் சார்பற்று உள்ளூராட்சி அமைச்சினால் நியமனம் செய்யப்படவேண்டும் இந்த இருவரும் கட்சிசார்பற்றவர்களாக இருப்பதால் ஸ்தலஸ்தாபன சபைகளில் போட்டி, பூசல்கள் ஏற்பட இடமில்லாது போய்விடும். ஆட்சிமன்றத்தில் நியமன எம். பிக்கள் தெரிவுசெய்யப்படுவது போல் ஸ்தலஸ்தாபன சபைகளுக்கும் நியமன அங்கத்தவர்களைத் தெரிவு செய்யவேண்டும். இதனால் சிறுபான்மைப் பிரதிநிதிகளுக்கும் சந்தர்ப்பம் கிடைக்கும்.

## விசேஷ பஸ் சேவைக்கு கோரிக்கை

யாழ்ப்பாணம், சனி

இம்மாதம் 15-ம் திகதி நடைபெறவிருக்கும் சிவராத்திரி தினத்தை முன்னிட்டு திருக்கேதீச்வரம்-பூநகரி ஊடாகச் செல்வதற்கு விசேஷ பஸ்சேவை ஏற்படுத்தும்படி யாழ்ப்பாணம் இ. போ. ச. முகாமையாளரையும் மன்னார் இ. போ. ச. முகாமையாளரையும் பூநகரி சக்தி கிராமமுன்னேற்றச் சங்கத் தலைவர் திரு. கே. தனபாலசிங்கம் கோரியுள்ளார்.

(ந. நி.)


**வியாபாரம்பெருக விளம்பரம் செய்க**

**வெலிங்டன் — யாழ்நகரில்**

தினசரி 2-30, 6-30, 9-30 மணிக்கு

★மக்கள் திலகம் எம். ஜி. ஆர்.
★நடிகையர் திலகம் சாவித்திரி
★நம்பியார் ★நாகேஷ் ★ராகினி
நடித்த

கௌரி பிக்சர்ஸ் **பரிசு**

மு. கருணாநிதியின் விமர்சனத்துடன்
S. S. வாசன் அவர்களால்
ஈஸ்மன்கலரில்படமாக்கப்பட்டு சென்னையில் நடைபெற்ற
இரண்டாவது அனைத்துலக தமிழ் ஆராய்ச்சிமகாநாட்டு கோலாகல காட்சியையும்



மற்றும்
மக்கள் திலகம் எம். ஜி. ஆர். - அறிஞர் அண்ணா ஆகியோர் இம்மகாநாட்டில் சொற்பொழிவாற்றுவதையும் பார்க்கலாம்!

தமிழ்நாடுசென்று விழாவைப் பார்க்காதவர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்!
ஒவ்வொரு தமிழனும் அவசியம் பார்க்கவேண்டிய படம்.

கிங்ஸ்லி பிளாஸா மற்றும் சினிமாஸ் திரைகளில்
**சிவாஜி—கே. ஆர். விஜயா**
முத்துராமன்—நாகேஷ்—எல். விஜயலக்ஷ்மி
நடித்த
**ஊட்டிவரைஉறவு**
(ஈஸ்ட்மன் கலர்)

மானிப்பாய்
**வெஸ்லி சினிமா**
தினசரி 6-30, 9-30 மணி
பிரிபோயா, போயா 2-30 மணி
ஜெய்சங்கர், விஜயலட்சுமி
நடித்த
**இரு வல்லவர்கள்**

3-வது வாரம்!
**ராஜா**
(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
10-30, 2-30, 6-30, 9-45
எம். ஜி. ஆர்-ஜெயலலிதா
மற்றும் பலர் நடித்த
**ஒளி விளக்கு**
(ஈஸ்ட்மென் கலர்)
(எஸ். ரி. ஆர். வெளியீடு)

இணுவில்
**ஸ்ரீ காலிங்கன்**
தினசரி 6-30, 9-30
பிரிபோயா, போயா 2-30
சிவாஜி - பத்மினி
நடித்த
**ஸ்ரீ வள்ளி**
(கேவா கலர்

இப்பொழுது நடைபெறுகிறது
**வின்ஸர் திரையில்**
தினசரி 4 காட்சிகள்
காலை 10-30, பிற்பகல் 2-30, 6-30, 9-45.
★எம். ஜி. ஆர். - ஜெயலலிதா
நாகேஷ், நம்பியார், ராஜஸ்ரீ நடித்த
G. N. வேலுமணி அளிக்கும்
**குடியிருந்த கோயில்**

**மனோஹரா — ராணி**
(யாழ்ப்பாணம்)
தினசரி 2-45, 6-45, 9-45,

(யாழ்ப்பாணம்
தினசரி 2-30, 6 30, 9-30.



"தென்னகத்து ஜேம்ஸ்பொன்ட்"
ஜெய்சங்கர்
"அலேக்"
விஜயநிர்மலா
அசோகன்
ராம்தாஸ்
சோ
வி. எஸ். ராகவன்
விஜயன்
மற்றும் பலர்
நடித்த
ஏ. எல். எஸ். புரொடக்ஷன்ஸ்



**நீலகிரி எக்ஸ்பிரஸ்**

கதை-வசனம்: 'சோ' திருமலை-மகாலிங்கம் இசை; மெல்லிசை மன்னன் டி. கே ராமமூர்த்தி
பாஸ்களும், சலுகைகளும் ரத்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரிட்டனும் ஐரோப்பிய பொதுச்சந்தை நாடுகளும்

# முக்கிய வெளிநாட்டுப் பிரச்னைகளில் கலந்து பேச ஒப்பந்தம்

## பிரான்ஸ்மட்டும் ஒதுங்கிநிற்கிறது

பிரிட்டன், பெப். 7

பிரிட்டனும் பிரான்சைத் தவிர்ந்த ஏனைய ஐரோப்பிய பொதுச்சந்தை அங்கத்துவ நாடுகளும் வெளிநாட்டு விவகாரங்கள்பற்றி பெரிய முடிவுகள் எடுக்கும்போது தங்களுக்குள் முதலில் ஆலோசனைகள் நடத்துவதென ஒப்புக் கொண்டிருக்கின்றன.

வெளிநாட்டு விவகாரங்கள்பற்றி தாங்கள் முடிவு எதுவும் செய்வதாயின் அதற்கு முன்பதாக தங்களுக்குள் ஆலோசனைகள் நடத்துவதற்கு இந்த நாடுகள் ஒப்பந்தம் ஒன்றை செய்து கொண்டுள்ளன. ஐரோப்பிய பொதுச்சந்தையில் அங்கத்துவம் வகிக்கும் பிரான்சைத் தவிர்ந்தஏனைய நாடுகளும் பிரிட்டனும் இந்த ஏற்பாட்டை செய்து கொண்டுள்ளன.

பிரிட்டன் பொதுச்சந்தையில் அங்கத்துவம் கேட்டு பல ஆண்டுகளாக மனுச் செய்து வருகின்றது. இதை பிரான்ஸ் தொடர்ச்சியாக நிராகரித்து வருகின்றது.

பிரிட்டனுக்கும் மற்ற நாடுகளுக்குமிடையில் ஏற்பட்டிருக்கும் இந்த ஒப்பந்தம் ஐரோப்பிய ஒற்றுமைக்கு திர்க்கமான ஒரு முன்னேற்ற நடவடிக்கை என்று பிரிட்டிஷ் வெளிஉறவு அமைச்சர் திரு. ஸ்ருவர்ட் தெரிவித்துள்ளார். பொதுச்சந்தையில் சேர்ந்து கொள்வதற்கு பிரிட்டன் தொடர்ந்து முயற்சி செய்யும்என்று திரு. ஸ்ருவர்ட் கூறினர்.

இந்த ஒப்பந்தத்தில் சேர்ந்து கொள்வதுபற்றி பிரர்ன்ஸ் பின்னர் அறிவிக்குமாம்.

மேற்குஜெர்மனி, இத்தாலி, ஹோலந்து, லக்ஸன்பேர்க் ஆகிய நாடுகள் இந்த ஒப்பந்தத்தில் பிரிட்டனுடன் சேர்ந்து கொண்டுள்ளன.

## வியட்னும்அமைதி பேச்சு

பாரிஸ், பெப். 7

வியட்னும் அமைதிக்கான முழு அளவிலானபேச்சுக்கள் நேற்று மீண்டும் ஆரம்பமாகின. பிரதிநிதிகள் தங்கள்தங்கள் நிலைமைகள் பற்றி கருத்துக்கள் வெளியிட்டபின்னர், முடிவுஎதுவுமின்றி கலைந்தன.

——

அமெரிக்கா

## ஏவுகணை தயாரிப்பு நிறுத்தப்பட்டது

வாஷிங்டன், பெப். 7

அமெரிக்கத்தனதுஏவுகணை உற்பத்தித்திட்டாதை தற்காலிகமாக நிறுத்தியுள்ளது.

அமெரிக்காவின் பாதுகாப்புத் திட்டத்தை பொதுவாக மறுபரிசீலனை செய்யும் நோக்கத்துடன் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

——

இந்திய கடற்படை

## கப்பல்கள் இலங்கை விஜயம்

புதுடில்லி, பெப். 7

இந்திய கடற்படையைச் சேர்ந்த சிலகப்பல்கள் 13-ம் திகதி இலங்கைத்துறைக்கு வரவிருக்கின்றன. இவை 16-ம் திகதி வரையில் கொழும்புத்துறைமுகதிலிருந்து விட்டு மாலைதீவுக்குப் புறப்பட்டுச்செல்லும்.

——

## சீன அதிகாரியை திருப்பித்தர கோரிக்கை

பீகிங், பெப். 7

நெதர்லாந்திலசீனபொறுப்பதிகாரியாகவிருந்த திரு. லியாஹேனி அமெரிக்காவில் அடைக்கலம் கோரும்படி அமெரிக்காவும் நெதர்லாந்தும் தூண்டிவிட்டதாக சீன அரசாங்கம் குற்றஞ் சாட்டியுள்ளது.

திருஷீயைத்திருப்பிஅனுப்பவேண்டும் இல்லையென்ருல் ஏற்படும் பிரதிகூலங்களுக்கு அமெரிக்காவும் நெதர்லாந்தும் தான் பொறுப்பேற்கவேண்டும். என்று சீன தெரிவித்துள்ளது.

நெதர்லாந்தில் முன்னர் சீன பொறுப்பதிகாரியாகவிருந்த திரு. ஷீ அமெரிக்காவில் இப்பொழுது பாதுகாப்புக்காக காவலில் வைக்கப்பட்டுள்ளார். சீன அரசாங்கம் தம்மீது பழிவாங்கும் நடவடிக்கை எடுக்கக்கூடும் என்று கூறி அவர் அமெரிக்காவில் தஞ்சம் புகுந்துள்ளார். அவருடைய மனைவியும் பிள்ளைகளும் ஏற்கனவே சீனவைவிட்டு வெளியேறிவிட்டார்களாம்.

## "உலகில் போரைத்தவிர்க்க இளைஞர்களால் முடியும்"

### உபசார விழாவில் வட்டுக்கோட்டை எம். பி.

சித்தங்கேணி, வெள்ளி

"இளைஞர்களுக்குப் பொது வாழ்வில் அதிக இடம் கொடுக்க வேண்டும். அவர்கள் கடமை. கண்ணியம், கட்டுப்பாடு கொண்டவர்கள். அவர்கள் விரும்பினல் உலகிளபோர் தவிர்ந்து பூரண சமாதானம் நிலவ வழியுண்டாகும்.

இவ்வாறு வட்டுக்கோட்டை கிராமசபையின் தலைவர் திரு. க. ச. நிற்சிங்கத்திற்கு சித்தங்கேணி இளைஞர்களால் அளிக்கப்பட்ட வரவேற்புபசார விழாவில் உரையாற்றிய வட்டுககோட்டை ஆட்சிமல்ற உறுப்பினர் திரு. அ. அமிர்தலிங்கம் குறிப்பிட்டார். இவ்விழா சித்தங்கேணி மகாகணபதிப்பிள்ளையார் கோவில் வீதியில் நடைபெற்றது.

செல்வன் க. நடராசா தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் திரு. அமிர்தலிங்கம் மேலும் பேசுகையில் பாடசாலையில் நான் கல்வி கற்கும்போதே திரு. நிற்சிங்கததை நன்கு தெரியுமென்றும், சிங்களச் சட்டத்திற்கு அடிபணியாமல் அவர் தமது உயர்ந்த பதவியைத் துச்சமென மதித்து அரசசேவையிலிருந்து வெளியேறியவரென்றும் சகல ,மக்களுடனும் ஒத்துழைக்கும் பண்புள்ளவரென்றும் இவர் ஏகமனதாகத் தலைவர் பதவிக்குத் தெரிவு செய்யப்பட்டமை வட்டுக்கோட்டை வரியிறுப்பாளர் செய்த அதிர்ஷ்டமென்றும் கூறினர்.

முன்னுள் சங்கானைப் பட்டினசபைத் தலைவர் திரு.சி. க. திருச்சிற்றம்பலம் பேசுகையில் உள்ளூராட்சி மன்றங்களில் ஊழல்களுக்கு இடமளிக்காது. நேர்மையான வழியில் நிர்வாகத்தைத் திறம்பட நிர்வகிப்பதற்கு தகுதி வாய்ந்த ஒருவரை வட்டுக்கோட்டை கிராம சபை அங்கத்தவர்கள் ஏகமனதாகத் தெரிவு செய்தமை பாராட்டுக்குரியது'' என்று கூறினர்.

வழக்கறிஞர் திரு. சி. சிவபாக்கியநாதன் பேசுகையில் ''சித்தங்கேணிக் கிராமம் அதனைச் சூழவுள்ள உள்ளூராட்சி மன்றங்களுடன் பிரிவு பட்டிருக்கிறது என்றும் அது வளம்பட வேண்டுமாகில் சித்தங்கேணிப் பகுதிக்குத் தனியான ஒரு கிராமசபை உருவாவதற்கு வட்டுக்கோட்டை எம். பி. உதவவேண்டும் என்ருர்.

பண்டிதர் வி. நவரத்தினம் செல்வி சற்குணதேவி நடராசா ஆகியோரும் பேசினர்கள்.

——

## கல்லூரி சமூகவியற் கழகம்

சித்தங்கேணி, வெள்ளி

வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரிச் சமூகவியற் கழகத்தின் இவ்வாண்டுமுதற்பருவ காலத்திற்கானகூட்டம்அண்மையில் மேற்படி கல்லூரியில் போஷகர் திரு. எம். திருநீலகண்டசிவம் தலைமையில் நடைபெற்றது.

இக்கழகத்தின் முதற் பருவ காலத்துக்கான உத்தியோகஸ்தர்கள் பின்வருமாறு:

தலைவர்: செல்வன் கே. குமாரசாமி. உப-தலைவர்கள்: செல்வன் எஸ். துரைசிங்கம், செல்வி ஏ. சிவநேசச்செல்வி. செயலாளர்: செல்வன் கே. குணசேகரம், உப-செயலாளர்கள்: செல்வன்கள் ரி.பொன்னம்பலம், ஏ. இராசேந்திரா. பொருளாளர்: செல்வி எஸ். சற்குணதேவி. உப-பொருளாளர்: செல்வன் கே. டோனேசன். பத்திராதிபர்: செல்வன் என். சந்திரகுமார். உப-பத்திராதிபர்: செல்வன் கே. சின்னத்தம்பி.

ஐந்துபேர் கொண்ட நிர்வாகசபையும் தெரிவுசெய்யப்பட்டது.

——

ஆந்திரா நிலைமை

## மாணவர் தலைவர்களை முதன்மந்திரி சந்திப்பார்

புதுடில்லி, பெப். 7

ஆந்திரப் பிரதேசத்தில் கிளர்ச்சிகளில் ஈடுபட்டு வரும் மாணவர் தலைவர்களைச் சந்திப்பதற்கான திகதிகளை முதன்மந்திரி திரு. பிரமானந்த ரெட்டி அறிவித்திருக்கிருர்.இன்றுஇல்லையென்ருல் இம்மாதம் 11-ம் 12ம் திகதி மாணவர்களை முதன் மந்திரி சந்திப்பார், மாணவர் தலைவர்களுடன் பேச்சுவார்த்தைகள் நடத்தும்படி மாணவர் சங்கங்கள் விடுத்த இறுதி எச்சரிக்கைக்குப் பதிலளிக்கும் விதத்தில் முதன்மந்திரி இந்த நடவடிக்கையை எடுத்துள்ளார்.

### நிஜலிங்கப்பா எதிர்ப்பு

தனி தெலுங்கானு ராஜ்யம் அமைக்கவேண்டுமென்னும் கோரிக்கையைத் தாம் ஆதரிக்கவில்லை என்று காங்கிரஸ் தலைவர் திரு. நிஜலிங்கப்பா கூறியுள்ளார்.

இந்தியர்கள்இப்படிச் சிந்திப்பதை நிறுத்திக்கொள்ள வேண்டிய தருணம் வந்துவிட்டதென்று அவர் கூறினர், இனிமேலும் நாட்டின் பிளவுக்கு இடந்தரக்கூடாதென்று திரு. நிஜலிங்கப்பா கூறினர்.

ஆந்திரபிரதேச எதிர்க்கட்சித் தலைவர் பிரமானந்த ரெட்டி அரசாங்கம் ராஜினமா செய்யவேண்டும் என்று வற்புறுத்தியுள்ளார்.ராஜ்யத்தில் அமைதியை நிலைநாட்ட அரசு தவறிவிட்டதென்று அவர் கண்டித்தார்.

## சித்தங்கேணி இளைஞர் கோரிக்கை

சித்தங்கேணி, வெள்ளி

வட்டுக்கோட்டைக் கிராமசபையில் இலவச சித்த ஆயுர்வேத வைத்தியசாலை அமைக்கப்படவேண்டுமென்றும், சித்தங்கேணியில் இளைஞர் விளையாட்டு மைதானம் உருவாக்கவேண்டுமென்றும் சித்தங்கேணிக் கிராமம் பூராவும், புராதன 'டச்சு வீதி' உட்படச் சகல தெருக்களுக்கும் மின்சாரம் வழங்கவேண்டுமென்றும் கோரும் வேண்டுகோளினை வட்டுக்கோட்டை கிராம சபைத் தலைவர் திரு. க. ச. நிற்சிங்கத்திடம் சித்தங்கேணி இளைஞர் சமர்ப்பித்துள்ளனர்.

## அயூப் நடவடிக்கை: முஸ்லிம்லீக் அங்கீகாரம்

டாக்கா பெப்ரவரி. 7

பாகிஸதான் அரசியல் திட்டத்தில்மாற்றங்கள் ஏற்படுத்துவதுபற்றி எதிர்க்கட்சித் தலைவர்களுடன் பேச்சுவார்த்தைகள் நடாத்த அதிபர் அயூப்கான் விடுத்த அழைப்பை முஸ்லீம்லீக்கின் காரியக்கமிட்டி அங்கீகரித்துள்ளது,

காரியக் கமிட்டியின் கூட்டம் அயூப்கானின் தலைமையில் டாக்காவில் நடைபெற்றது.

டாக்காவிலும் நாராயன்களிலும் ராணுவம் வாபஸ் செய்யப்பட்டுள்ளது.

இந்தப் பகுதிகளில் அமுலிலிருந்த 144வது சட்டப் பிரகடனம் வாபஸ் செய்யப்பட்டுள்ளது.

# மே. ஐரோப்பாவுக்கு நிக்ஸன் 23-ம் திகதி புறப்படுகிருர்

### "அட்லாண்டிக்" உறவுகளை பலப்படுத்த முயல்வாராம்

வாஷிங்டன், பெப். 7

அமெரிக்க ஜனதிபதிதிரு. நிக்ஸன் மேற்கு ஐரோப்பிய நாடுகளுக்கு இம்மாதம் 23ந் திகதி புறப்படவிருக்கின்ருர்.

அத்லாந்திக் நேச நாடுகளுடனன உறவுகளை புதுப்பித்து மேலும் வலுவடைய செய்வதில் இந்தப் பிரயாணத்தின்போது முக்கியமாக முயற்சி மேற்கொள்ளப் போவதாக திரு. நிக்ஸன் நிருபர்களிடம் தெரிவித்துள்ளார்.

மேற்கு ஐரோப்பிய நாடுகளுக்கும் அமெரிக்காவுக்குமுள்ள தொடர்புகளை பலப்படுத்தவும், ஒத்துழைப்பை வலுவாக்கவும் அவர் [illegible]ற்சி செய்வாராம்.

இந்த நாட்டுத் தலைவர்களுடன் பேசிய பின்னர் சோவியத் தலைவர்களைச் சந்திப்பதுபற்றி ஆலோசிக்கப்படும் என்று அவர் கருத்து வெளியிட்டார்.

பிரான்ஸ், இத்தாலி, பிரிட்டன் போன்ற நாடுகளுக்கு அவர் விஜயம் [illegible].

## கொக்குவில் கி. ச. கூட்டம்

கொக்குவில், வெள்ளி

கொக்குவில் கிராமசபையின் மாதாந்தக் கூட்டம் வரும் 14-ம் திகதி மாலை 3 மணியளவில் சபை மண்டபத்தில் கிராமசபைத்தலைவர் திரு. சி. க. சபாபதி தலைமையில் நடைபெறும்.

## அனுமதிக்கப்பட வேண்டும்

யாழ்ப்பாணம், சனி

மானிப்பாய் பட்டின சபையின் கூட்டங்கள்நடைபெறும்போது கூட்ட நிகழ்ச்சிகளைப் பார்வையிட பத்திரிகை நிருபர்கள் அனுமதிக்கப்பட வேண்டுமென இச் சபையின்முதலாம் வட்டார அங்கத்தவர் கோரிக்கைவிடவிருக்கிருர்.

இதற்கான முன்னறிவித்தலை முதலாம் வட்டார அங்கத்தவரான திரு முதலியார் கொடுத்துள்ளார். சபையின் விசேஷ கூட்டம் இம்மாதம் 12-ம் திகதி நடைபெறும்போது திரு. முதலியார் இப்பிரேரணையைக் கொண்டு வருவார்.

மக்கள் நலனை முன்னிட்டு சோலைவரியை 9 வீதத்திலிந்து 6 வீத மாகக்குறைகக வேண்டுமெனவும் இவர் பிரேரணை கொண்டு வரவிருக்கிருர்.

(ந. நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மணிவாக்கு**

வெறும் வார்த்தைகளல்ல உண்மையான சேவையை விரும்பிச் செய்யுங்கள். கீழே இருப்பவர்களை மேலே உயர்த்துவதில்தான் சேவையின் மகத்துவம் தங்கியிருக்கிறது.

—மகாத்மாகாந்தி.


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna.
Post Box: 49, Jaffna. Telephone: 389,

யாழ்ப்பாணம், கீலக வருஷம் தை மாதம்26-ந் திகதி
(8-2-69)


## கனிஷ்ட பல்கலைக் கல்லூரிகள்

யாழ்ப்பாணத்திலே ஒரு பெரிய பல்கலைக்கழகத்தை ஆரம்பிக்க அரசாங்கம் இன்னும் பெரிய மனது செய்யாவிடினும், ஒரு கனிஷ்ட பல்கலைக்கல்லூரியையாவது இங்கு ஆரம்பிக்க முன்வந்தது நன்றியுடன் வரவேற்கத் தக்கதாகும்.

மொத்தம் ஆறு புதிய கல்லூரிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளனவெனினும் அதில் ஒன்றே ஒன்றுதான் தமிழ்ப்பகுதியிலுண்டு. இத்தீவிலே பல பகுதிகளிலும் வசிக்கும் தமிழ் மாணவர்கள், இப்புதிய கல்விகற்க யாழ்ப்பாணத்துக்குத்தான் வரவேண்டியவர்களாகவுள்ளனர். பல்லாயிரம் தமிழ் மாணவர்கள் விண்ணப்பித்தும், 120 பேருக்குத்தான் இந்த ஸ்தாபனத்தில் சேர இடம் கிடைத்துள்ளதாகத் தெரிகிறது. மற்ற ஐந்து கல்லூரிகளிலும் இதே கதையாகத்தான் இருக்கும்.

பேராதனை, கொழும்பு முதலிய பெரிய கலைக்கழகங்களில் பட்டப் படிப்பு படிக்கும் மாணவர்களில் சிலர் கூட, அதை விட்டுவிட்டு, இப்புதிய கல்லூரிகளில் சேர விண்ணப்பித்துள்ளதாகத் தெரிகிறது. காரணம் விளக்கத் தேவையில்லை. பட்டப் பரீட்சையில் தேறியவர்களில் பல்லாயிரம் பேர் இன்னும் வேலை கிடைக்காமலுள்ளனர். ஆனால் புதிய கல்லூரிகளில் பல தொழிற் பயிற்சிகளை அளிப்பதால், இதில் இரண்டு வருட பயிற்சி முடிந்ததும், அவர்கள் ஏதாவது தொழில்செய்து பிழைக்க வாய்ப்புண்டு. ஆகவே இன்னும் அதிகமான மாணவர்கள் இக்கல்லூரிகளில் சேர இனி முன்வரக்கூடும்.

இந்தப் பிரச்னையைத் தீர்க்க கல்வி அமைச்சு என்ன செய்யப் போகிறதென்பது முக்கியகேள்வி. இடமில்லை என்றுசொல்லி பல மாணவர்களுக்கும் கைவிரிக்கப் போகிறதா? அல்லது அதிகமான இவ்வித கல்லூரிகளை ஆரம்பிக்க முற்படுமா? ஏற்கெனவே இலவச கல்விச் சேவைக்காக அதிகமான பணம் செலவாவதாயின் இனியும் புதிய கல்லூரிகளை அமைக்க அரசாங்கம் முன்வருமென்றோ, அதனால் முடியுமென்றோ எதிர்பார்ப்பது துர்லபம். அமெரிக்காவிலே அரசாங்கம் மட்டுமன்றி, தனிப்பட்ட ஸ்தாபனங்களும் இவ்வித கனிஷ்ட கல்லூரிகளை வெற்றிகரமாக நடத்தி வருவதாகத் தெரிகிறது. அந்த அனுபவத்தைத் தழுவி இங்கும் இவ்வித கனிஷ்ட பல்கலைக்கழகக் கல்லூரிகளை அமைக்க தனிப்பட்டவருக்கு ஏன் அனுமதியளிக்கக் கூடாது? எக்காரணம்பற்றியும் பயனுள்ள கல்வியை, வாலிபர்களுக்கு மறுப்பது பெரிய குற்றம். தங்களால் முடியாதபோது பொதுமக்களின் ஒத்துழைப்பைப் பெற அரசாங்கம் ஏன் தயங்க வேண்டும்.

பலாலியிலுள்ள கனிஷ்ட கல்லூரியிலே வெளியூர்களிலிருந்து வந்து படிக்கும் மாணவருக்கு தாங்கி இருக்கவும் உணவு சாப்பிடவும் தக்க வசதிகளில்லையாம் இக்குறையைப்பற்றி ஆராய்ந்து அவற்றை நீக்க தக்க நடவடிக்கை எடுப்பதுடன், தமிழ்ப்பகுதி மாணவர்களின் நன்மைக்காக, மட்டக்களப்பு, திருகோணமலை முதலிய இடங்களிலும் இவ்வித தொழிற் பயிற்சிக்கானகல்லூரிகளை ஆரம்பிக்க ஆவன செய்தல் அவசியமாகும்.

## வெட்கமும் துக்கமும்

பேராதனையில் நடைபெற்றுள்ள அசம்பாவிதங்களைப்பற்றி, பிரதமமந்திரி, பார்லிமெண்டில் வெளியிட்டுள்ள சில புதிய விவரங்களைக்கேட்க யாருக்கும் வெட்கமும் துக்கமும் ஏற்படும். தவறு ஒருபக்கம் மட்டுமில்லையென்றும் இருபுறங்களிலுமுள்ளதென்றும் தெரிகிறது. மாணவ மாணவிகளில் சிலரின் செயல்களைப் பற்றி பிரதமர் தெரிவித்ததை இங்கு எழுதவும் பேனா கூசுகிறது.

நாட்டிலுள்ள புத்திசாலிகளை பலமுறையும் வடிகட்டி தெரிவுசெய்து பல்கலைக்கழகத்திலே பெரும்செலவில் இலவசமாக கல்வி கற்பிக்கச் செய்கிறோம். நாட்டின் எதிர்காலத்தலைவர்களாக வரவேண்டிய அவர்களில் யாரும் ஆபாச முறைகளில் நடந்துகொண்டது உண்மையாயின், இந்தக் கல்வியின் பயன் இதுதானா என்று ஏமாற்றமடைய வேண்டியவர்களாக இருக்கிறோம். நல்லவேளையாக ஒரு சிலரே இப்படிச் செய்துள்ளதாகவும் பெரும்பாலோர் இதில் சம்பந்தப்படவில்லையென்றும் தெரிகிறது.

இதேசமயம் இராணுவத்தினரும் ஆபாச முறையில் நடந்துள்ளதுடன், பல மாணவர் விடுதிகளுக்கும், நூல் நிலையம் ரசாயனஆய்வு கூடம் முதலியவற்றுக்கும் பெரும் சேதம் விளைவித்து மாணவர்களை இம்சை செய்துள்ளனர். இருதரப்பினரும் அதிக கஷ்டநஷ்டமடைந்துள்ளனர். இராணுவத்தினரோ, மாணவர்களோ சுபாவத்தில் கெட்டவர்களல்லர். இதற்கான முழுப் பொறுப்பும், பல்கலைக்கழக இராணுவ அதிகாரிகளையே சாரும்.

**மிதக்கும் வைத்தியசாலை 'ஹோப்'**

# பத்துமாதம் அரியப
# திரும்பிச் செல்கி

— விசாலாம்பாள் அரியகுட்டி —

நம்பிக்கை இழந்து போயிருந்த பலபிணியாளர்களுக்கு நம்பிக்கை ஒளியேற்றியபின் தனது பத்து மாதப் பணியை இந்த நாட்டில் முடித்துக்கொண்டு இம்மாதம் 10-ந் திகதி அமெரிக்க மிதக்கும் வைத்தியசாலையான 'ஹோப்' கப்பல் திரும்பிச் செல்லவிருக்கின்றது. அக்கப்பல் பற்றியும் அதன் சேவைகள் பற்றியும் இக்கட்டுரை விளக்குகின்றது.

1968-ம் ஆண்டு ஏப்ரல் 15-ம் திகதி இலங்கைக்கு வந்து சேர்ந்த அமெரிக்க வைத்திய கப்பல் 'ஹோப்' இந்நாட்டு மக்களுக்குச் சௌக்கியத்துறையில் அளப்பரிய சேவையை அளித்துவிட்டு, இம்மாதம் 10-ம் திகதி புறப்படவிருக்கிறது. உதவிகோரும் ஒவ்வொரு நாட்டு மக்களுக்கும் அரிய வைத்திய சேவையை ஆற்றி வந்த, ஆற்றப்போகிற இவ் வைத்தியக்கப்பல் 'ஹோப்' பின் வரலாறு, நிர்வாகம், அதன் அமைப்பு, அது ஆற்றும் சேவையாகியன பற்றி ஓரளவு அறிந்திருத்தல் அவசியம்.

'ஹோப்' என்ற பெயரையே அவர்கள் அதன் நோக்கம் குறித்த காரணப் பெயராக வைத்திய கப்பலுக்கு வைத்துள்ளனர். 'எங்குமுள்ள மக்களுக்கு சௌக்கியத்துறையில் உதவ சந்தர்ப்பம் அளிப்பதாகும். வாஷிங்டனில் உள்ள மக்கள் சௌக்கிய நிறுவனத்திற்கு சேவைசெய்ய அமைக்கப்பட்ட திட்டமேஇக்'ஹோப்' பாகும். இந்த நிறுவனம் நான்கு முக்கிய நோக்கங்களைக் கொண்டது. தனது நாட்டினதும மற்ற நாடுகளினதும் வைத்திய முறைகளைப் பரிமாறிக் கொள்ளல், உடனடி வைத்திய தேவைகளைக் கவனித்தல், வைத்தியம் பற்றிய சர்வதேச விளக்கத்துக்கு ஒரு சந்தர்ப்பம் அளித்தல், ஒரு நாட்டுக்கு, மருத்துவ, ஆஸ்பத்திரி வசதிகளை அளித்தல் ஆகிய நான்குமே அதன் குறிக்கோளாகும். இந்த நான்கு குறிக்கோள்களையுமே இவ் வைத்தியக் கப்பலும் கொண்டிருக்கிறது.

15,000 தொன் நிறையுள்ள இக் கப்பல் முதன் முதலில் கடற்படை வைத்தியக் கப்பலாக விருந்தது. பின்னர் இந் நிறுவனம் கடனுகப் பெற்று 1960-ல் புதுப்பித்து 'ஹோப்' என்னும் புதுப் பெயரையும் சூட்டியது. இந்தவைத்தியக் கப்பல் 1960-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் சான்பிரான்ஸிஸ் கோவிலிருந்து புறப்பட்டு தென்வியட்னும், ஈகுவடோ, கயனு, நய்கரா, கொலம்பியா ஆகிய நாடுகளுக்குத் தனது வைத்திய சேவையை அளித்தது. ஒவ்வொரு நாட்டிலும் பத்து மாதங்கள் தங்கி சேவை செய்த இக்கப்பலில் 1,100 மேலான அமெரிக்க டாக்டர்கள் பணியாற்றியுள்ளனர்.

இக்கப்பலின் நிர்வாகம் அதன் சேவையின் சிறப்பு வாய்ந்தஅம்சமாகும். இதில் சேவைசெய்யும் வைத்தியர்களில் சிலரைவிட பலர் தற்காலிகமானவர்கள். தற்காலிகமானவர்கள் தமது நாட்டிலிருந்து வந்து இருமாதங்களுக்கு இலவசமாகப் பணியாற்றினர். இவ் வைத்தியக் கப்பலை நடத்த வருடமொன்றுக்கு 5 கோடிரூபா செலவாகிறது. இப்பெருந்தொகைப் பணத்தை அமெரிக்க நிறுவனங்களும், அங்குள்ள பணம்படைத்த பலரும் நன் கொடையாகக் கொடுத் துதவியுள்ளார்கள். மருந்துவகைகளும் இவ்வாறே இலவசமாக அளிக்கப்பட்டவை. இக்'ஹோப்' கப்பலின் திட்டத்தை நிறுவியவரும், அதன் தலைவரும், பிரதம வைத்திய அதிகாரியுமான திரு. வில்லியம் பி. வால்ஷ் எம். டி. இந்த வைத்தியக் கப்பலைச் சகல வைத்திய வசதிகளும் ஒருங்கே சேர்ந்த ஒரு நவீன வைத்திய சாலையின் அமைப்பைப் போன்று அமைத்துள்ளார்.

ஆண், பெண், குழந்தைகள், சிறுவர்கள் ஆகிய பல திறத்தாற்கும் தனித்தனி வார்டுகள் அமைக்கப்பட்டுள்ளன இதைவிட விரிவுரைகள் நடப்பதற்கென அழகிய அறைகள், மிக விரைவாக இயங்கக் கூடிய 'எக்ஸ்ரே' கருவிகளைக் கொண்ட அறைகள், பல் வைத்தியகிளினிக், கண், காது முதலியவற்றுக்கான கிளினிக், வைத்திய பதிவறைகள், சத்திர சிகிச்சையறைகள் போன்ற பல வைத்திய பிரிவுகள் யாவும் நவீன வைத்திய வசதிகளோடு அமைக்கப்பட்டுள்ளன.

இத்தகைய சகல வசதிகளோடும் இலங்கையின் அழைப்பின்பேரில் வைத்தியப் பணியாற்ற வந்த 'ஹோப்'பிற்கு இலங்கையின் செஞ்சிலுவைப் பகுதியினர் உட்பட பல வைத்திய நிறுவனங்கள் தொண்டர்களை இக்கப்பல் வைத்தியர்களுக்கு உதவிசெய்ய அளித்தன. 'ஹோப்' கப்பல் நிர்வாகத்தில் இத்தொண்டர்கள் ஆற்றிய சேவை குறிப்பிடத்தக்கதொன்றாகும். இவர்கள் அமெரிக்க டாக்டர்களுக்கு

### இன்றைய பலன்

சனிக்கிழமை
(8-2-69)
தை மாதம், 26 உ

திதி- சஷ்டி மாலை 5-45 மேல் சப்தமி.

நட்சத்திரம்- சித்திரை பகல் 3 - 03 மேல் சுவாதி

ராகுகாலம் - 9-35—11-05.

சுபநேரம்- 3-35—5-05.

இன்று பிறந்தவர்களுக்கு: வாழ்க்கையில் வசந்தம்தென்படும். பிரிந்தவர்கள் மீண்டும் வாழ்க்கையில் இணைவர். குடும்பத்தில் குதூகலம் நிலவும். தொழிலாளர்கள் முன்னேற்றம் காண்பர். உணவு விடயத்தில் அதிக கவனம் செலுத்தவும். சிலர் வாழ்க்கையில் நீண்டதூரப் பயணம்ஏற்படலாம். எதிர்பாராத வரவுகளுக்கும் இடமுண்டு.

மேஷம்- களஸ்திர சுகம், கண்ணியம் சேரும்.
ரிஷபம்- சினேகிதபகை சிந்தையில் குழப்பம்.
மிதுனம்- தந்தையின் கருணை, தடைகளும் விலகும்.
கடகம்- உழைப்பில் வெற்றி, உதவும் மனப்பான்மை.
சிம்மம்-வரவில்உயர்வு, வாழ்த்தும் உண்டு.
கன்னி- கண்துடைப்பு வேலை கவனம்வேண்டும்.
துலாம்- மக்கள் பிணி, மனப்போராட்டம்.
விருச்சிகம்- வரவில் திருப்தி,வாழ்க்கை சுகம்.
தனுசு- துஷ்டர் உறவு, துயரச்சேதி.
மகரம்- தாய்ப்பாசம், தனம்,புகழ்சேரும்.
கும்பம்-பிள்ளைப் பாசம் கொள்ளை இன்பம்.
மீனம்- அரசபயம், ஆயுதபீடை.

சோதிடக்கலாநிதி
திருமலை வேலுப்பிள்ளை

### ஊர்வலம்

உடுப்பிட்டி, வெள்ளி
தமிழ்நாடு முதலமைச்சர் திரு. சி. என். அண்ணுதுரையின் மறைவுககு அனுதாபம் தெரிவிக்குமுகமாக நெல்லியடியில் மௌன ஊர்வலம் ஒன்று நடைபெற்றது.

கரவெட்டி வாணி கலைக் கழகத்தினுல் நடாத்தப்பட்ட இந்த மௌன ஊர்வலத்தில் ஆயிரக்கணக்கானேர் கலந்துகொண்டனர். மௌனஊர்வலத்தில் பங்குகொண்டோர் கறுப்புக் கொடிகளைத் தாங்கியவண்ணம் அமைதியாக அண்ணுவின் உருவப்படத்துடன் கரவெட்டி வாணி கலைக் கழகத்தைச் சென்றடைந்தனர். அங்கே அறிஞர் அண்ணுவிற்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.

செவ்வாய்க்கிழமை நெல்லியடியிலுள்ள இரு தியேட்டர்களிலும் படக்காட்சி நிறுத்தப்பட்டது.

பருத்தித்துறையிலும் தியேட்டரில் படம் காண்பிக்கப்படவில்லை.

பல்கலைக்கழக துணைவேந்தர் திரு.என். ஜே. பெரேரா தமதுபதவியை ராஜினமாச் செய்திருப்பதுநல்லது. இனி இவ்வித அசம்பாவிதங்கள் ஏற்படாமலிருப்பதற்கு இந்த அனுபவம் படிப்பினையாக இருக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...ரியபணிபுரிந்தபின்னர் ...ல்கிறது

...கப்பலுக்குள் மட்டுமன்றி நாட்டின் பல நகரங்களிலும் அவர்களின் சிகிச்சையில் உதவிசெய்துள்ளனர். இக்கப்பலில் தொடர்பதிகாரியாக கடமையாற்றும் பெண்மணி எல்லாக் கேள்விகளுக்கும் சளைக்காது பதிலளித்ததோடு தொடர்புகளையும்சிறப்பாகச் செய்து கொடுத்தார்.

அமெரிக்க வைத்தியப்பகுதியினரோடு சேர்ந்து ஒரே நேரத்தில் உள்நாட்டு தாதிகள் பணியாற்றி பயிற்சியும் பெற்றுள்ளார்கள்.

இலங்கையில் அக்கப்பல் வந்த நாளில் இருந்து 20,000 நோயாளிகள் விண்ணப்பித்தனர். பலர் உள்நாட்டு வைத்தியர்களால் சிகிச்சை பெறக் கூடியதாக விருந்தும் 'ஹோப்பில்' வைத்தியம் செய்ய விரும்பி மிக கஷ்டப்பட்டு விண்ணப்பித்தனர். 'ஹோப்' வைத்தியர்களும் நோயாளிகளுக்கு ஏமாற்றம் அளிக்க விரும்பாது தங்களால் செய்யக்கூடிய சேவையைச் செய்தனர். 1000க்கு மேலான நோயாளிகள் கப்பலுக்குள் அனுமதிக்கப்பட்டு சிகிச்சையளிக்கப்பட்டனர். 2500க்கு மேலான சத்திர சிகிச்சைகளை 'ஹோப்' வைத்தியர்கள் கப்பலுக்குள்ளும் வெளியிலும் செய்தனர். இவர்கள் சிகிச்சையளிக்கும் போது இலங்கை வைத்தியர்களும், தாதிகளும், மற்றும் வைத்திய மாணவர்களும் உதவி செய்து அவர்களிடம் பயிற்சியும் பெற்றனர். 'ஹோப்' வைத்தியக் கப்பல் நம்நாட்டுக்காற்றிய சேவையால் கண்பார்வையற்றவர்கள் கண் பெற்றனர். நடக்கவியலாத சிலர் நடக்கக் கூடியவர்களானுர்கள். இருதய நோயாளிகள் பலர் சிகிச்சை பெற்றதனுல் மரண பயத்தை ஓரளவுக்கு நீக்கினர். கெந்தலை குஷ்டரோக வைத்தியசாலை, குருடர் செவிடர் பாடசாலை ஆகியவற்றிற்கு இவர்கள் அளித்த நன்றி பாராட்டக் கூடியதொன்றுகும்.

எனவே எமது அரசாங்கத்தின் வேண்டுகோளுக்கிணங்கி பணியாற்றிவந்த 'ஹோப்' தம்நாட்டு வைத்திய முறைகளை எமக்களித்தும், உடனடி வைத்திய தேவைகளைக் கவனித்தும் வைத்தியம்பற்றிய பல விரிவுரைகளையாற்றியும் ஆஸ்பத்திரி, மருந்து வசதிகளை அளித்தும் தனது குறிக்கோளை நிறைவேற்றியுள்ளது. இவ்வைத்தியக்கப்பலின்டாக்டர்கள்சிலர்தொடர்ந்து சிலமாதகாலம் இங்கு தங்கி சேவை செய்ய உத்தேசித்துள்ளனர்.

## தமிழாசிரியர் சங்க விசேஷ கூட்டம்

உடும்பராய், சனி

வட இலங்கைத் தமிழாசிரியர் சங்க நிர்வாகிகளின் விசேஷகூட்டம் யாழ்ப்பாண ஆசிரியர் சங்க அலுவலகத்தில் இன்று பிற்பகல் மூன்று மணிக்கு சங்கத் தலைவர் பண்டிதர் ச. பொன்னுத்துரை தலைமையில் நடைபெறும். அப்போது பின்வரும் முக்கிய பிரச்னைகள் விரிவாக ஆராயப்படவிருக்கின்றன.

ஆசிரியர் இடமாற்றம், புது நியமனங்களும், பதவி உயர்ச்சிகளும், பாடசாலைத் தலைவர்களுக்குச் சேவை நீடிப்பு, தமிழாசிரியர் பிராந்தியக் கந்தோர்களிலும், தலைமைக் கந்தோர்களிலும் மேலுத்தியோகத்தர்களைச் சந்திப்பதில் ஏற்படும் கஷ்டங்கள்.

## கொண்டாடினர்

யாழ்ப்பாணம், சனி

மானிப்பாய் பட்டினசபை சுதந்திரதினவிழாவை சிறப்பாக கொண்டாடியது.

சுதுமலைச்சந்தியிலிருந்து ஊர்வலமாக பட்டினசபை அங்கத்தவர்கள் அனைவரும் பட்டினசபை மைதானத்துக்கு அழைத்துவரப்பட்டனர்.

முதலில் 5-ம் வட்டார அங்கத்தவர் திரு. எஸ். இராஜேந்திரம் தேசீய கொடியை ஏற்றிவைத்தார். இதையடுத்து பேரறிஞர் அண்ணாவின்பிரிவுக்கு5நிமிட நேரமௌனஅஞ்சலிசெலுத்தப்பட்டது. இதன்பின் மானிப்பாய் கோயில்பற்றிலுள்ள பாடசாலை மாணவ மாணவிகளின் கலைநிகழ்ச்சிகள் இடம் பெற்றன.

பல போட்டிகளில்வெற்றி பெற்ற மாணவ மாணவிகளுக்கு திரு.எம். வைரமுத்து பரிசில்கள் வழங்கினர்.

## பட்டதாரிகள் சங் பொது க்கூட்டம்

யாழ்ப்பாணம், வெள்ளி

அகில இலங்கை வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தின் பகிரங்கப் பொதுக்கூட்டம் யாழ்ப்பாண நகரமண்டபத்தில் இம்மாதம் 9ந் திகதி காலையில் திரு.க.சதானந்தன் தலைமையில் நடைபெறவிருக்கிறது. அநுராதபுரம் பா. உ திரு. கே. ரத்ணயக்கா, மூதூர் பா. உ. திரு. ஏ. எல். மஜீத், திருவாளர்கள் ஜீ. ஜீ. பொன்னம்பலம், ஏ.அமிர்தலிங்கம் உட்படப் பல பாராளுமன்ற உறுப்பினர்களும், சங்கக் கிளைச் செயலாளர்களும் கலந்துகொள்வார்கள்.

## 'செயல் வீரர்'

புத்தூர், வெள்ளி

'பேரறிஞர் அண்ணாவின் மறைவு, பாரதத்துக்கு மட்டுமன்றி அகில உலகத் தமிழர்களுக்கும் பெரு நஷ்டமாகும். தமிழர்களின் தன்நிகரற்ற மாபெரும் செயல் வீரர் அண்ணா,'

இவ்வாறு ஆவரங்கால் சரஸ்வதி சனசமூக நிலையத்தினர் அறிஞர் அண்ணாவின் குடும்பத்தாருக்கு அனுப்பி வைத்த அனுதாபச் செய்தியில் தெரிவித்துள்ளனர்.

## அல்லைப்பிட்டிக்கு புதிய கி. ச. அலுவலகம்

அல்லைப்பிட்டி, வெள்ளி

புதிதாக அமைக்கப்பட்ட அல்லைப்பிட்டி கிராமசபைக்குப் புதிய கிராமசபை அலுவலகம் விரைவில் நிறுவப்படவிருக்கிறது. இதற்கான ஏற்பாடுகளை உள்ளூராட்சி அமைச்சர் மேற்கொண்டுள்ளார். முன்பு இக்கிராம சபைக்குச் சொந்தமான அலுவலகம் மண்டைதீவுக் கிராமசபைக்கு உரியதாகிப் போய்விட்டது. தற்போது இக்கிராமசபை அலுவலகம் வாடகை வீட்டில் இயங்கி வருகிறது.

# ஐயாறன் எழுதுவது

பேராதனை உள்ளிட்டு இலங்கையிலே பல பல்கலைக்கழகங்களிலும் ஏன் இவ்வளவு சங்கடங்கள் ஏற்படவேண்டும். இதைப்பற்றி யோசிக்கையில் மனதில் ஓர் எண்ணம் உதித்தது.

இங்கு பொதுமக்களில் பலருக்கும் கர்மவினையில் நம்பிக்கையுண்டு. எது நடப்பினும் அது நாம் செய்த வினையின் பயனே என்றும் தீதும் நன்மையும் பிறர்தர வாரா என்று பலரும் நம்புகிறேம். அப்படியாயின் எந்தக் கர்மவினையின் பயன் இது என்ற கேள்வி எழுகிறது.

இங்கு ஒரு பல்கலைக்கழகம் வேண்டுமென்று பல வருடங்களாகக் கேட்கின்றேம். துரதிருஷ்டவசமாக நம் தலைவர்களுக்குள்ளாக ஒற்றுமையில்லையென்பது உண்மையே. அதைச் சாக்கிட்டு இங்கு ஒரு பல்கலைக்கழகமோ, [ஒரு துறைமுகமோ] கட்டாமல் அரசாங்கத்தினர் ஒத்திப்போட்டு வருகின்றுர்களல்லவா? அந்தப் பெரிய பாவத்தின் பயன்தானே இதுவெல்லாம் என்று எனக்குப் பட்டது.

இது எப்படியாயினும் இன்னும் எவ்வளவு காலத்திற்கு இங்கு பெரிய பல்கலைக்கழகமும் துறைமுகமும் மறுக்கப்படப் போகிறதோ? நம் தலைவர்கள் இதில் இன்னும் ஒத்துப்போக முடியாவிடில் பொதுமக்களின் வெறுப்புக்கு அவர்கள் ஆளாவர். தமிழ்த்தலைவர்கள் ஒற்றுமையாகக் கேட்டால் இங்கு ஒரு பல்கலைக்கழகத்தையோ துறைமுகத்தையோ அமைக்க அரசாங்கம் எப்படி மறுக்க முடியும்?

வித்தியோதய எனும் கலாச்சார பல்கலைக்கழகத்தில் விஞ்ஞான பாடத்தை பெரும் பணச் செலவில் ஆரம்பித்துள்ளனர். பிரதமரும் பேசியுள்ளார். கொழும்பைச் சுற்றியுள்ள பல பல்கலைக்கழகங்களும் இவ்விதம் அபிவிருத்தி செய்யப்படுகின்றன. ஆனல் யாழ்ப்பாணம் உள்ளிட்டு தமிழ்ப் பகுதியின் கதி என்ன? நம் மாணவ, மாணவிகளை தூர இடத்திற்குப் பெரும் பணச் செலவில் அனுப்பி இன்னும் எவ்வளவு காலத்திற்கு சங்கடப்படப் போகிறேமோ?

0 0 0

நாளை 9ந்திகதி ஞாயிறன்று காலையிலே வதிரி வடக்கிலேயுள்ள ஒரு பாடசாலையில் இலவச சமயதீட்சை அளிக்க ஏற்பாடாகின்றதாக ஒருதுண்டுப் பிரசுரம் பார்த்தேன்.

''சைவசமயவிதிப்படிசைவர்கள் யாவரும் சிவதீட்சை பெற வேண்டுமென்பது வேதாகமங்களின் முடிவாகும். அவ்விதமான தயக்கமும் பயமுமின்றி சைவர்களெல்லாரும் தீட்சை பெறலாம். ''பஞ்சாட்சர மந்திரமே நம் மனதையும் வாழ்க்கையையும் புனிதப்படுத்தும்'' என்று பொருள்பட பல சைவப் பெரியார்கள் வெளியிட்டுள்ள வேண்டுகோளில் கேட்டுள்ளனர்.

இந்த நல்ல முன்மாதிரியைப் பல ஊர்களும் பின்பற்றுவதே மேலான சைவப் பணியாகும்.

இல்லக விளக்கது இருள் கெடுப்பது
சொல்லக விளக்கது சோதியுள்ளது
பல்லக விளக்கது பலருங் காண்பது
நல்லக விளக்கது நமச்சிவாயவே.

—அப்பர்சுவாமிகள்.

# கோணேசராலய பகுதியை புனிதநகராக்கவேண்டிய அவசியம்

## திருமலை சக்தி நிலையம் கூறும் காரணம்

திருக்கோணமலைமாவட்ட வசதிகளைப் பயன்படுத்தல் மற்றும்அபிவிருத்திசெய்தல் பற்றி ஆராய்ந்து அரசாங்கத்திற்கு ஆலோசனை கூறுமுகமாக அரசாங்கத்தால் அமைக்கப்பட்ட ஆலோசனைச் சபைக்கு, திருக்கோணமலை சக்தி நிலையம் திருமலை அபிவிருத்திபற்றிச் சில ஆலோசனைகளைத் தெரிவிக்கும் மகஜரொன்றினை அனுப்பிவைத்துள்ளது. 600 பாக நீளமும். ஒருபுறம் 80 பாகமும் மறுபுறம் 30 பாகமும் கொண்ட பிரடரிக் கோட்டை என்றழைக்கப்படும் கோணேசராலயப் பிரதேசத்தை இந்துக்களின் புனிதநகராகப்படுத்தவேண்மென்றும், தற்போது அவ்வெல்லைக்குள் இருக்கும் நிலையான கட்டிடங்கள் அனைத்தையும் இந்துக்கள் கலை கலாச்சார உபயோகத்திற்குப்பயன்படுத்தவேண்டுமென்றும் இம்மகஜரில் கேட்கப்பட்டுள்ளது.

இந்துக்களின் புனிதநகருக்கென ஆலய பரிபாலன சபைக்குப் புறம்பானதும், அரசினர் அங்கீகாரம் பெற்றதுமான இந்துப் பெருமக்கள் கொண்ட ஒரு சபை அமைத்து, அச்சபைஆலயம் நீங்கலான இடங்களின் நிர்வாகப் பொறுப்பைக் கவனிக்க வேண்டுமென்றும் இந்நிர்வாகச் செலவினத்திற்கென அரசாங்க நிதி வழங்கப்பட வேண்டுமென்றும் மேலும் கேட்கப்பட்டுள்ளது.

பிரடரிக்கோட்டைப் பகுதியை ஏன் புனிதநகராகப் பிரகடனப்படுத்தவேண்டுமென்பதற்கு மகஜரில் காரணங்கள் கூறப்பட்டுள்ளன அவையாவன.

''திருக்கோணேஸ்வரம் தொன்மை வாய்ந்த க்ஷேத்திரங்களான திருக்காளத்தி, திருச்சிராப்பள்ளி, திரிகூடமலை என்னும் மூன்றினுள் ஒன்றென மயூரகிரிப் புராணமும், மற்றும் புராணங்களும் எடுத்துக்காட்டுகின்றன. திரிகூடமலையே திருக்கோணேஸ்வரமாகும். இதனல் ஆதி காலந்தொட்டு இந்தச் சேத்திரம் சைவ சமயிகட்கு ஒரு முக்கிய ஸ்தலமாகக் கருதப்படுகின்றது.

இலங்கை வேந்தன் இராவணனல் வழிபட்டு வந்த புனிதக்ஷேத்திரம் எதுவென புராண இதிகாச சரித்திரங்கள் சான்று பகர்கின்றன.

மனுநீதிகண்ட சோழன் வாராமதேவன், இவ்வாலயச் சிறப்பினையறிந்து இங்கு வந்து ஆலயத்திருப்பணி வேலைகளைத் தொடங்கியதாகவும், அவன் மகன் குளக்கோட்டன் திருப்பணி வேலைகளை முடித்து இலங்கையரசி ஆடகசவுந்தரியை மணந்து அவருதவியுடன் குளமும் கட்டி நன்செய் புன்செய் நிலங்களும் மானியமாக வழங்கி வழிபட்டு வந்ததாகக் கல்வெட்டுகள் சான்று கூறுகின்றன.

இலங்கை வேந்தன் மனுநேயகயபாகு இவ்வாலயத்தையிடித்து புத்த விகாரையமைப்பான் கருதிஇங்குற்ற காலை இருகண் பார்வையழிந்து, தன்குறையுணர்ந்து இறைவனை வேண்டத் திருவருளால்ஒருகண் பார்வை பெறவும் அவ்விடத்திற்குக் கண்களை என்னும்பெயரிட்டு அவ்விடமிருந்து வடபால் கரையோரம் வந்து கோணநாதேஸ்வரர் ஆலயத்தைக் கண்டு வணங்கி மறு [illegible] பார்வை பெறவும், [illegible] மகிமையறிந்து இவ்வாலய நித்திய நைமித்தியங்களுக்கு வேண்டியன செய்து மானியங்களும் வழங்கியதாக வரலாறும், கல்வெட்டுகளும் கூறுகின்றன.

போர்த்துக்கீசரால் இவ்வாலயம் அழிக்கப்படும் முன் இவ்விடத்தி முப்பெரும் கோவில்கள் இருந்ததாக வரலாறு கூறுகின்றது.

கிறிஸ்துவுக்குப் பின் 609-1942இல்வாழ்ந்த சமய குரவருள் ஒருவரான திருஞான சந்பந்தரால் திருப்பதிகப் பாடல் பெற்றது.

கி. பி..1676 இல் போர்த்துக்கீசரால் இவ்வாலயம் அளிக்கப்பட்டு அவைகளைக் கொண்டே கோட்டை கட்டியதாகச் சரித்திரமும், கண்முன் இருக்கும் சான்றுகளும் எடுத்துக்காட்டுகின்றன.

இந்நாள் பூமியுள் புதைந்திருந்துகண்டெடுக்கப்பட்ட சிலைகளும் சிற்பங்களும், இன்றுகடலோரத்தில் காணப்படும் சித்திர வேலைப்பாடமைந்த கற்றூண்களும் மற்றவைகளும் முன் கூறியவைகளை உறுதிப்படுத்துகின்றன.

போர்த்துக்கீசரால் அழிக்கப்பட்ட ஆலயம் இலங்கை வாழ் சைவப்பெருமக்களால் புனருத்தாரணம் செய்யப்பட்டிருக்கின்றது.

உலகில் பலபாகங்களிலுமிருக்கின்ற இந்துக்களனைவருக்கும் புனித ஸ்தலமாக அமைந்துள்ளது.

திருக்கோணமலையில் ஒரு மத்திய செயலகம், கைத்தொழில் பேட்டை, தமிழ்ப் பல்கலைக்கழகம், நவீன சந்தை, அரசினர் வைத்திய சாலை, நீதிஸ்தலம், பஸ் [illegible] மடம் முதலியன அமைக்கப்படவேண்டுமென்றும், அவற்றின் அவசியம் [illegible] மகஜரில் விரிவாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கட்டைவேலி கிராம மக்கள் கோரிக்கை

உடுப்பிட்டி, வெள்ளி

''நெல்லியடிப் பட்டின சபையின் பரிபாலனத்தில் இருக்கும் அத்துளுகுளக் குழாய்நீர்' நீர்ப்பாசனத் திட்டம் மூலம் நெல்லியடிப் பட்டினசபை எல்லைக்குள் வசிப்பவர்களே பயனடைவர். ஆனால் பல வருடகாலமாகக் குடிநீர்ப் பஞ்சத்தால் அவதியுற்று வருவது கட்டைவேலி கிராமசபைப் பகுதியைச் சேர்ந்த கரவெட்டி மக்களேயாவர்.

ஆதலினால் கட்டைவேலி கிராமசபைப் பகுதிகளுக்குக் கட்டாயம் குழாய்நீர் விநியோகம் செய்யவேண்டும். இல்லாவிடில் இத்திட்டம் பயனற்றதாகிவிடும்.

கரவெட்டி மேற்கு மத்தொனி திருவள்ளுவர் சனசமூக நிலையம் மேற்கண்டவாறு கோரும் மகஜரொன்றை இங்கு விஜயஞ்செய்த உள்ளூராட்சி அமைச்சர் திரு. ஆர். பிரேமதாசாவிடம் ஒப்படைத்தது. மேற்படி சனசமூக நிலைய இணைச் செயலாளர்கள் திருவாளர்கள் க. நாகமுத்து, ஆ. வன்னியசிங்கம் ஆகியோர் இம்மகஜரை அமைச்சரிடம் சமர்ப்பித்தனர்.

அரசாங்க நன்கொடை நிலங்களைக் காணியற்ற சிறுபான்மை வகுப்பினருக்கு வழங்கவேண்டுமென்றும், சிறுபான்மைத் தமிழர் அங்கம் வகிக்கக்கூடிய முறையில் கட்டைவேலி கிராமசபை வட்டாரங்களைத் திருத்தி அமைக்க வேண்டுமென்றும், உச்சில் குளத்தை விஸ்தரித்து நவீன வசதிகள் செய்து தருமாறும் அம்மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## ''ஏழைகளின் தோழன்''

யாழ்ப்பாணம், சனி

''ஏழை எளியவர்களின் இன்னுயிர்த் தோழனும், தமிழரின் பெருந் தலைவனுமான அண்ணாவைப் பிரிந்து துயருறும் அவரது மனைவி திருமதி அண்ணாதுரையவர்களுக்கும், தமிழக அரசினருக்கும், தமிழ் மக்களுக்குமிடையே நமது துயரைப் பகிர்ந்துகொள்கிறோம்.''

இவ்வாறு யாழ்ப்பாணம் அண்ணாமலை இசைத் தமிழ் மன்றச் செயலாளர் திரு. ஆ. நமசிவாயம் அனுதாபச் செய்தியொன்றில் தெரிவித்துள்ளார். இது திருமதி அண்ணாதுரைக்கும், தமிழக பதில் முதலமைச்சருக்கும் அனுப்பிவைக்கப்பட்டது.

## மகா வித்தியாலயத்துக்கு மண்டபம்

அராலி, வெள்ளி

அராலி சரஸ்வதி மகாவித்தியாலய புதியமண்டபத்துக்கான அங்குரார்ப்பண விழா சென்ற மாதம் 28ந் திகதி அதிகாலையில் வட்டுக்கோட்டை எம். பி. திரு. அ. அமிர்தலிங்கம் திருமதி அமிர்தலிங்கம் ஆகியோர் தலைமையில் ஆரம்பிக்கப்பட்டது.

அதிபர் திரு. த. இராசையா இவர்களை வரவேற்றார். வேலைகளை அராலிக் கிராமசபைத் தலைவர் திரு. இ. நாகலிங்கம், வித்தியாலய நலவுரிமை உறுப்பினர் திரு. க. நவரத்தினம் ஆகியோர் கவனித்துவருகிறார்கள்.

## அஞ்சலி செலுத்துவர்

கோண்டாவில், வெள்ளி

வரும் 9ந் திகதி அறிஞர் அண்ணாவின் பிரிவுக்கு அனுதாபக் கூட்டமொன்று கோண்டாவிலில் நடைபெறவிருக்கிறது. தமிழரசுக்கட்சியின் கோண்டாவில் கிளையினால் நடத்தப்படும் இக்கூட்டத்தில் பல எம். பி.க்கள் பேசவிருக்கின்றனர். அமரர் அண்ணாவின் உருவப் படத்தைத் தாங்கிய வண்ணம் கோண்டாவில் கிழக்குத் தமிழரசு வாலிப முன்னணியின் காரியாலயத்திலிருந்து ஊர்வலம் ஒன்று புறப்படவிருக்கின்றது.

## விளக்கு அணைந்து விட்டது

முல்லைத்தீவு, வெள்ளி

அண்ணாவின் மரணச் செய்தி கேட்ட முல்லைத்தீவு மக்கள் உடனடியாகத் தங்கள் வீடுகளில் கறுப்புக் கொடிகளை தூக்கினர் கடைக்காரர் கடைகளைப் பூட்டிக் கறுப்புக்கொடி தூக்கினர், தியேட்டர்கள் மூடப்பட்டுக் காட்சிகள் ரத்துச் செய்யப்பட்டன. முல்லைத்தீவுப் பட்டினசபை மூடப்பட்டது. பட்டினசபையின் கொடிக்கம்பத்தில் பெரும் கறுப்புக் கொடி பறந்தது. பட்டினசபைத் தலைவர் திரு. ம' சூ. வஸ்தியாம்பிள்ளை உடனடியாக அவசரக் கூட்டம் கூட்டி கூட்டத்தில் இரு கண்களாலும் கண்ணீர் மல்க, தமிழ் நாட்டின் விளக்கு அணைந்து விட்டது. எமதண்ணா பிரிந்துவிட்டார் என்று கூறிய போதுகூடியிருந்தோர் யாவரும் கண்ணீர் மல்கினர். அவர் பேசும் போது தமிழன் என்ற ஒரு இனம் உண்டு என்று உலகத்துககு எடுத்துக்காட்டி தமிழ் நாட்டை உண்டாக்கி தமிழ் மணம் உலகெலாம் பரவச் செய்தவர் அண்ணாஎன்றார்.



## புதிய வழக்கறிஞர்

கொக்குவில் கிழக்கைச் சேர்ந்த திரு. பொன்னையா காங்கேயன் அவர்கள் நீதியரசர் திரு. வீ. சிவசுப்பிரமணியம் முன்னிலையில் சென்ற ஜனவரிமாதம் 23-ம் திகதியன்று வழக்கறிஞராகச் சத்தியப் பிரமாணம் செய்தார். இவர் அரசினர் பயிற்சிக்கல்லூரியில் போசிரியராக இருந்து இளைப்பாறிய காலஞ்சென்ற கலாநிதி வ. பொன்னையாவின் சிரேஷ்ட புதல்வராவர். இவர் யாழ்ப்பாண இந்துக் கல்லூரி, சுன்னாகம் ஸ்கந்தவரோதய கல்லூரி, தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி ஆகியவற்றில் கல்வி பயின்றார். நீதியரசர் திரு. சிவசுப்பிரமணியம் தனது ஆசிரியரது மகனை வரவேற்பதில் தாம் மிகுந்த சந்தோஷம் அடைவதாகத் தெரிவித்தார்.

## கூடுதல் விலைக்கு விற்றனராம்
### தீர்ப்பு ஒத்திவைப்பு

முல்லைத்தீவு, வெள்ளி

முல்லைத்தீவு பஜாரில் வேலை செய்யும் இரு வர்த்தகர்கள் ஒரு இருத்தல் பம்பாய் வெங்காயத்தை கட்டுப்பாட்டு விலை 28சதமாக இருக்கும்போது 35 சதமாக விற்றதாக வவனியா உணவு விலைக் கட்டுப்பாட்டுப் பரிசோதகர் திரு-றகுமானல் தொடரப்பட்ட வழக்கு முல்லைத்தீவு நீதிபதி திரு. ஆர். நவரத்தினம் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

கொழும்பு உணவுப் பரிசோதகர் முல்லைத்தீவு உணவுவிலைக் கட்டுப்பாட்டுப் பரிசோதகர் திரு. வி. முதலித்தம்பி ஆகியோர் சாட்சியமளித்தனர். இதன்பின் இரு கட்சி வாதங்களையும் கேட்டபின் நீதிபதி முதலாம் எதிரியை விடுதலை செய்தார். இரண்டாம் எதிரியான பாக்கியநாதனைக் குற்றவாளியாகக் கண்ட நீதிபதி இரண்டாம் எதிரிக்குத் தண்டனை விதிப்பதை இம்மாதம் 18ந் திகதிக்கு ஒத்தி வைத்துள்ளார்.

## மாணவர் தவிப்பு

பண்டத்தரிப்பு, வெள்ளி

காங்கேசன்துறை, கீரிமலை ஊறணி, பலாலி ஆகிய இடங்களிலிருந்து இளவாலைக்குக் கல்வி கற்கவரும் மாணவ மாணவியர் நலனை பிட்டுக் காலையிலும் மாலையிலும் பஸ்சேவை நடைபெற்று வருகிறது. ஆனால் மாலையில் பாடசாலையிலிருந்து பாணவ மாணவிகள் வருமுன்னே அவர்களுக்சான பஸ் புறப்பட்டு விடுகிறது. இதனால் மேற்படி இடங்களிலிருந்து வரும் பிள்ளைகள் பெரும் சிரமத்துக்குள்ளாவதாகத் தெரிகிறது.

## கிழங்கு நோய்

பண்டத்தரிப்பு, வெள்ளி

உருளைக்கிழங்குச்செய்கையில் அதிக ஊக்கம் காட்டி வரும் பண்டத்தரிப்பு விவசாயிகள் ஒரு வகை நோயினால் கிழங்குப் பயிர் பாதிக்கப்படுவதாகக் கூறுகின்றனர். இதனால் கிழங்குச் செடிகள் வாட்ட முற்றும் காய்ந்தும் போகிறதாம்.

## அதிர்ச்சியும் சோகமும்

சங்கானை, வெள்ளி

தமிழ்நாட்டு முதலமைச்சர் திரு. சி. என். அண்ணாதுரையின் மரணம் இப்பகுதியில் பெரும் அதிர்ச்சியையும் சோகத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

வானொலிப் பெட்டிகள் இருக்கும் ஒவ்வொரு இடங்களிலும் கவலை தோய்ந்த முகத்துடன் செய்திகளைக் கேட்டவண்ணம் மக்கள் கூடிக்கூடி நின்றனர். பொது இடங்களிலும் பிரதான சந்திகளிலும் சில வீடுகள் கடைவாயில்களிலும் அண்ணாவின் திருஉருவம் பொறித்த கறுப்புக் கொடிகள் தொங்கவிடப்பட்டுள்ளன.

சங்கானை பட்டின அதவிருத்திச் சபையினர் அண்ணாவின் பிரிவுச் செய்தி கேட்டதும் இரங்கற்கூட்டம் நடாத்தி மறைந்த பேரறிஞருக்கு அஞ்சலி செலுத்தினர். சங்கானை இந்து வாலிபர் சங்கத்தினரும் அண்ணாவின் ஆத்மா சாந்தியடைய கூட்டுப் பிரார்த்தனை செய்ததுடன் அறிஞர் மறைந்த அன்று மாலை மௌன ஊர்வலம் ஒன்றையும் நடாத்தினர். மக்கள் மனதைக் கொள்ளை கொண்டு சென்ற அண்ணாரின் ஆத்மா சாந்தியடைய ஆலயங்களில் விசேடஆராதனைகளை இந்து வாலிபர் சங்கத்தார் நடாத்தினர்.

## சிறுவர் சித்திரக்காட்சி

பருத்தித்துறை, வியா.

உடுப்பிட்டி வட்டார பாடசாலைகளின் சிறுவர் சித்திரக்காட்சி இம்மாதம் 10-ம், 12-ம் திகதிகளில் உடுப்பிட்டி மகளிர் பாடசாலையில் நடைபெறவிருக்கிறது. வடமாநிலக்கல்வியதிபதி திரு. எஸ். தணிகாசலம் திறந்துவைக்கும் இக்காட்சிக்கான ஒழுங்குகளைச் சித்திரவித்தியாதிகாரி திரு, ஏ. தம்பித்துரை மேற்கொண்டுள்ளார்.

## 'தமிழ் உலகுக்கு நஷ்டம்'

யாழ்ப்பாணம், சனி

'தமிழ்நாட்டின்மாபெரும் தலைவரும் அறிஞரும் தேசபக்தருமாகிய திரு. சி. என். அண்ணாதுரையின் பிரிவு தமிழ் நாட்டு மக்களுக்கு மட்டுமல்ல தமிழ் வாழும் உலகம் அனைத்துக்கும் ஈடுசெய்ய முடியாத நஷ்டம் என்பதை உணரும் மானிப்பாய் மக்கள் தமது ஆழ்ந்ததுக்கத்தை தமிழ் நாட்டு அரசாங்கத்துக்கும் அண்ணாவின் குடும்பத்தினருக்கும் தெரிவித்துக்கொள்கிறார்கள்.

இவ்விதபிரேரணையை மானிப்பாய் பட்டினசபை முதலாம் வட்டார அங்கத்தவர் திரு. சி, பொ. வ. மாக. முதலியார் பிரேரிக்க முன்னைநாள் பட்டினசபை உபதலைவர் திரு. செ. அப்புத்துரை அனுவதித்தார்.

மானிப்பாய் யட்டினசபை மண்டபத்தில் நடைபெற்ற ஒரு பொதுக்கூட்டத்தில் இப்பிரேரணை நிறைவேற்றப்பட்டது.

திரு. முதலியார் பேசுகையில் தமிழ்மன்னர்களின் பின் தமிழை வளர்த்து அதற்கு உரிய இடம் அளித்தவர் திரு. அண்ணா எனக்குறிபபிட்டார்.

(ந. நி


**அன்பு பாலர் பாடசாலை**

330, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

3 வயதுக்கும் 5 வயதுக்கும் இடைப்பட்ட பாலர்கள் ''மொன்ரிசோறி முறையில்'' 'டிப்ளோமா'' பயிற்சி பெற்றஆசிரியைகளால் கல்வியைத்தொடங்க ஓரிடம்.

பிரவேசப் பணமில்லை, மாதக் கட்டணம்
ரூ. 7-50 மட்டுமே!

சில பாலர்களுக்கே இடமுண்டு.
விண்ணப்பியுங்கள்; அல்லது நேரில் வாருங்கள்.



**தம்பி அன் கோ.,**

வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்

ஓராண்டு சேமிப்பில்
**ரூ. 100-00 கொடுத்தால்**
1 வருட முடிவில்
**ரூ. 110-00 பெறலாம்**

ரூபா நூறு நூறாக எப்பொழுதும் சேமிக்கலாம்
''நூற்றுக்கு மேல் ஊற்று''
ஊற்றை நாடுங்கள் உள்ளத்தைப் பெருக்குங்கள்

இந்த ரூபா நூறையும் 3 மாதத்திற்கு மேல்
9 சதவீத வட்டியுடன் எப்பொழுதும் எடுக்கலாம்.



**கப்ஸ்டன் சிகரெட்களை வாங்குங்கள்**




அவை நல்ல புகையிலைக் கலவை கொண்டவை

சிலோன் டுபாக்கோ கம்பனி லிமிட்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மத்தியகல்லூரி மகாஜனுவை வென்றது

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக்கும் தெல்லிப்பழை மகாஜனக்கல்லூரிக்கும் இடையில் மகாஜனக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற கிரிக்கெட் போட்டியில் மத்திய கல்லூரி 9 விக்கெட்டுகளால் வெற்றிபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய மத்தியகல்லூரி 6 விக்கெட்டுகள் நஷ்டத்துக்கு 308 ஓட்டங்களைப் பெற்றது. இக்கோஷ்டியின் காப்டன் புரட்சிதாசன் மிகவும் திறமையாக துடுப்பெடுத்தாடி 63 ஓட்டங்களைப் பெற்றுர்.

மத்தியகல்லூரியின் ஸ்கோர் விபரம் வருமாறு: புரட்சிதாசன் 63, சாந்திகரன் 59, தில்லையம்பலம் 48, தயாசிங்கம் 30, ஸ்ரீகுலேந்திரன் 25, விஜேகரன் 21.

மகாஜனுக்கல்லூரி பந்துவீச்சு வீரர் ஸ்ரீகாந்தராஜா 66 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டையும், தர்மேஸ்வரன் 64 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டையும் வீழ்த்தினர்.

மகாஜனுக் கோஷ்டி 1-வது இன்னிங்ஸில் மொத்தம் 149 ஓட்டங்களைப் பெற்றது. இதில் ரவீந்திரன், மோகன்ராம் முறையே 40, 43 ஓட்டங்களைப் பெற்றனர்.

மத்தியகல்லூரிபந்துவீச்சு வீரர் தில்லையம்பலம் 21 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டையும், ஜெயரட்ணகுமார் 14 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டையும், புரட்சிதாசன் 17 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டையும் வீழ்த்தினர்.

மகாஜனுக்கோஷ்டி 2-வது இன்னிங்ஸில் மொத்தம் 186ஓட்டங்களைப் பெற்றது. இதில் தர்மேஸ்வரன் 56ஓட்டங்களைப் பெற்றுர். மத்தியகல்லூரி பந்துவீச்சு வீரர் ரஞ்சிற்குமார், தில்லையம்பலம், சாந்திகரன் முறையே 3, 3, 2 விக்கெட்டுகளை வீழ்த்தினா.

மத்தியகல்லூரி 2-வது இன்னிங்ஸில் 1 விக்கெட்நஷ்டத்துக்கு 28 ஓட்டங்களை பெற்று மகாஜனுக்கல்லூரியை 9 மேலதிக விக்கெட்டுகளால் வெற்றி பெற்றது.

(தே. நி.)

# ஹாட்லியிடம் பற்றிக்ஸ் தோல்வி

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரிக்கும், பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரிக்குமிடையில் சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற கிரிக்கெட் போட்டியில் ஹாட்லிக்கல்லூரி இன்னிங்ஸால் வெற்றி பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஹாட்லிக்கல்லூரி ஆரம்பத்தில் அடுத்தடுத்து விக்கெட்டை இழந்தது. இக்கல்லூரி 2 விக்கெட்டுகளை இழந்தபோது ஆக 10 ஓட்டங்களைப் பெற்றது. பின் மூன்ருவது விக்கெட்டை இழக்கும்போது 110 ஓட்டங்களைப் பெற்றது. இதில் செல்வானந்தராசா 43 ஓட்டங்களையும், பெனடிக்ற் 46 ஓட்டங்களையும் பெற்றனர். இதையடுத்து ஹாட்லிக் கல்லூரிக் கோஷ்டி மளமளவென விக்கெட்டுகளை இழந்து மொத்தம் 160 ஓட்டங்களைப் பெற்றது.

சென். பற்றிக்ஸ் கல்லூரி தனது முதலாவது இன்னிங்ஸில் 49 ஓட்டங்களையும், இரண்டாவது இன்னிங்ஸில் 60 ஓட்டங்களையும் பெற்று ஹாட்லிக்கல்லூரியிடம் இன்னிங்ஸ் வித்தியாசத்தால் தோல்வியுற்றது.

(தே. நி.)

# உடைகள் நனைந்தே பிரயாண செய்யவேண்டுமாம்

## பூநகரி மக்கள்படும் கஷ்டம்

யாழ்ப்பாணம், சனி

பூநகரிக்கு பிரயாணம் செய்யும் மக்கள் இப்போது தமது உடைகளை நனைத்துக்கொண்டே பிரயாணம் செய்ய வேண்டியிருக்கிறதாம். கேரதீவு — சங்குப்பிட்டி படகுச் சேவை சீராக இயங்காததாலேயே இவ்விதம் மக்கள் கஷ்டம் அனுபவிக்க வேண் யிருப்பதாகத் தெரிகிறது.

படகுச்சேவை சீராக இல்லாததால் பிரயாணிகள் கிடைக்கும்ஒரிருபடகில் நெருங்கிக்கொண்டு பிரயாணம் செய்வதால் படகு அடிக்கடி தண்ணீர் கோலிவிடுவதாலேயே இவ்விதம் ஏற்படுகிறது.

படகுச்சேவை நேர ஒழுங்கின்படி இயங்காததால் பூநகரியிலிருந்து யாழ்ப்பாணம் பிரயாணம் செய்யும் மக்களும் யாழ்ப்பாணத்திலிருந்து பூநகரிக்கு செல்லும் மக்களும் வீண்தாமதங்களுக்குள்ளாகவேண்டிய நிலை ஏற்படுகிறது. பல தடவைகள் இவர்கள் பஸ்சைத் தவறவிட்டு நீண்ட நேரம் ஆடத்துறையில் காத்து காத்து நிற்க வேண்டியிருக்கிறதாம். இத்துறைகளில் தங்குவதற்கு தகுந்த இடம் அமைக்கப்படாததால் குழந்தைகள், பெண்கள் பகலில் வெயிலிலும் இரவில் குளிரிலும் கஷ்டப்பட வேண்டியிருக்கிறது.

கேரதீவு சங்குப்பிட்டி மகாதேவா பாலத்துறைகளில் மலசலகூட வசதிகள் இல்லாதிருப்பது பற்றிபலதடவைகள் பொது மக்கள் புகார் தெரிவித்திருந்தும் இதுவரை கவனிக்கப்படவில்லை.

இரவு நேரத்தில் வெளிச்சம் இல்லாதிருப்பது பற்றி ஆயச் சேவையைப் பொறுப்பேற்று நடத்தும் பூநகரிபலநோக்குக் கூட்டுறவுச் சமாஜத்துக்கு நேரடியாகச் சென்று மக்கள் பலர் புகார் செய்துவருகிருர்கள்.

சில மாதங்களுக்குமுன் பஸ் சேவை சீர்கேடுபற்றி குறைபட்டுவந்த பூநகரி மக்கள் இப்போது பஸ்சேவை சீர்திருந்தும்போது படகுச் சேவை சீர்கேடடைந்துள்ளது பற்றி அதிருப்தி கொண்டுள்ளார்கள்.

இக்குறைபாடுகள் பற்றி 250 பேர் கையொப்பமிட்ட மகஜர் போக்குவரத்து அமைச்சருக்கும் யாழ்ப்பாண அரசாங்க அதிபருக்கும் கிளிநொச்சி எம். பி. பண்டிதர் கா: பொ. இரத்தினத்துக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

(ந. நி)

# சுதந்திரதின விளையாட்டு போட்டி முடிவுகள்

பூநகரி, வெள்ளி

பூநகரியில் சுதந்திரதின விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. இவ்விழாவில் பூநகரிப்பகுதிப் பாடசாலைகளின் உடற்பயிற்சி அணிவகுப்பு நடத்தப்பட்டது. இவ்வணிவகுப்பை பூநகரி காரியாதிகாரி திரு. எம். இராசரத்தினம், பூநகரி இராணுவ அதிகாரி ஆரியரத்தின, பூநகரிதபால் அதிபர் திரு. பி. கணபதிப்பிள்ளை ஆகியோர் பார்வையிட்டனர்.

விழா ஆரம்பமாகியதும் விழாவில் பூநகரி காரியாதிகாரி, பூநகரி கிராமசபைத் தலைவர், தபால் அதிபர், இராணுவ அதிகாரி ஆகியோர் சொற்பொழிவாற்றினர் விளையாட்டுப்போட்டிகளும் நடத்தப்பட்டன. போட்டி முடிவுகள் வருமாறு:

சைக்கிள் ஓட்டம்: ச. கணேசரத்தினம், தடை ஓட்டம்: சு. கலைச்செல்வி, விநோத உடைப்போட்டி: பொ. தில்லைநாதன், பலூன் உடைத்தல்: ரி. சின்னராசா, பாடல்: பரம்பன் கிராய் தமிழ் கலவன் பாடசாலை, பூநகரி மகாவித்தியாலய மாணவ மாணவியர்களின் பேச்சும் இடம் பெற்றது. உத்தியோகத்தர்களுக்கும் பொதுமக்களுக்குமான கயிறிழுத்தல் போட்டியில் உத்தியோகத்தர் வெற்றி பெற்றனர். கரபந்தாட்டப் போட்டியில் இரணைதீவு விளையாட்டுச் சங்கம் வெற்றியீட்டியது. அன்று அண்ணுவின் பிரிவுக்கு 3 நிமிடநேர அஞ்சலி செலுத்தப்பட்டது.

## அல்லைப்பிட்டி மக்கள் கோரிக்கை

அல்லைப்பிட்டி, வெள்ளி

'போக்குவரத்து வசதியற்ற பின் தங்கிய எமது அல்லைப்பிட்டிக் கிராமத்துக்கு ஓர் ஆயுள்வேத வைத்தியசாலையொன்றை உடனடியாக நிறுவித் தரவும் என அல்லைப்பிட்டிக் கிராம சபையினரும் இப்பகுதி மக்களும் உள்ளூராட்சி அமைச்சரிடம் கோரியுள்ளனர்.

அவர்களது கோரிக்கையில் எங்கள் கிராம மக்கள் நோய் பிணிகள் ஏற்பட்டால் பல மைல் தூரத்திலுள்ள யாழ்ப்பாணத்துக்கோ அன்றி வேலணை, ஊர்காவற்றுறை ஆகிய இடங்களிலுள்ள வைத்தியசாலைக்கோ செல்லவேண்டியுள்ளது. நாட்டு வைத்தியர்களோ அன்றி அரசினர் வைத்தியசாலையோ எங்கள் ஊரில் இல்லை, இந்நிலையில் இப்பகுதி மக்களில் சுகவாழ்வுக்குப் பெரும் தொல்லையாக உள்ளது. ஆதலால்இந்நிலை நீங்க ஓர் ஆயுள்வேத வைத்தியசாலை ஒன்றை நிறுவித் தரவும் என்றும் கேட்டுள்ளனர்.

## கொடித் தினம்

அல்லைப்பிட்டி, வெள்ளி

தீவுப்பகுதியிலுள்ள பாடசாலைகளில் இன்று முதல் 10-ந் திகதி வரை கொடித் தினம் அனுஷ்டிக்க ஏற்பாடு செய்யப்பட்டு வருகின்றது. இவ் ஏற்பாடுகளை பள்ளம்புலம் கூட்டுப் பிரார்த்தனைச் சபையினர் மேற்கொண்டு வருகின்றனர்.

## வரவேற்புக் கூட்டம்

யாழ்ப்பாணம், சனி

யாழ். மேயர் திரு. எஸ். நாகராசா, உதவி மேயர் திரு. ஏ. துரைராஜசிங்கம் 14-ம் வட்டார உறுப்பினர் திரு. ஈ. கே. ராஜரத்தினம் ஆகியோருக்கும், நாளைமாலை பருத்தித்துறைவீதியிலுள்ள குருநாதர்சாமிகோவில் வீதியில் வரவேற்பளிக்கப்படவிருக்கிறது.

யாழ்ப்பாண எம். பி. திரு. ஜீ. ஜி. பொன்னம்பலம் தலைமையில் நடைபெறவிருக்கும் இக்கூட்டத்தில், பலஎம். பிக்களும் மாநகரசபை உறுப்பினர்களும், சொற்பொழிவாற்றுவார்கள். புகையிரத நிலையச்சந்தியிலிருந்து ஊர்வலம் ஆரம்பமாகும்.

### பாஷையூரில்

யாழ்ப்பாணம், சனி

யாழ் மேயருக்கும், உதவி மேயருக்கும் மாநகரசபை உறுப்பினர் டாக்டர் ஏபிரகாமுக்கும் இன்று மாலை பாஷையூரில் வரவேற்பளிக்கப்படவிருக்கிறது. யாழ்ப்பாண எம். பி. திரு. ஜி. ஜி. பொன்னம்பலம், உபசபாநாயகர் திரு. எம். சிவசிதம்பரம் மற்றும் மாநகரசபை உறுப்பினர்கள்சொற்பொழிவாற்றுவார்கள்.

## வேலை நிறுத்தி அஞ்சலி

அல்லைப்பிட்டி, வெள்ளி

அரியாலை காந்திநிலைய வீதியிலுள்ள நெசவு நிலையத்தில் வேலை செய்யும் முப்பதுக்கு மேற்பட்ட தொழிலாளர்கள் பேரறிஞர் அண்ணுவின் மறைவுக்கு அனுதாபம் தெரிவிக்குமுகமாக ஒரு நாள் தங்களது வேலையை நிறுத்தி அனுதாபத்தைத் தெரிவித்துக்கொண்டனர்.


பலமற்ற பாட்டரிகளைப் புறக்கணியுங்கள்

எவலைற்

பாட்டரிகளை மாட்டுங்கள்




சீ. வி. பாட்

கிடைக்கும் இடம்

கொழும்பு — கண்டி — யாழ்ப்பாணம்

தயாரிப்பாளர்: மேர்கரி பாட்டரி கம்பனி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருமண அழைப்பு

**தியாகராஜா — இராஜேஸ்வரி**

நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரி ஆசிரியர் திரு. க. நடராசா தம்பதிகளின் புத்திரன் திருநிறைசெல்வன் தியாகராஜாவுக்கும் (கடற்படை), திரு. சு. இராசையா தம்பதிகளின் புத்திரி திருநிறைசெல்வி இராஜேஸ்வரிக்கும் 9-2-69 ஞாயிறு காலை 8 மணியளவில் இருபாலையில் நடைபெறும் திருமணத்திலும், மாலை மணமகன் இல்லத்தில் நீர்வேலியில் நடைபெறும் வரவேற்புபசாரத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.

662

## டீசல் லொறி விற்பனை

22ஸ்ரீ 4307 கொமர் டீசல் லொறிக்குக் கேள்வி விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப் பத்திரங்கள் தென் யாழ்ப்பாணம் ப. நோ. கூ. ச.சமாச முகாமையாளரிடமிருந்து 22-2-69 வரை ரூபா நூற்றி ஐம்பது (150/-) மட்டும் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

கேள்வி விண்ணப்பம் 25-2-69 பகல் 12-00 மணிக்கு முன் கிடைக்கக் கூடியதாய் பதிவுதபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும். தபால் உறையின் இடது மேல் மூலையில் 'லொறி விண்ணப்பம்' என எழுதப்படவேண்டும்.

இப்படிக்கு
காரியதரிசி
தெ. யாழ். ப. நோ.
கூ. ச.சமசாம்
கிளிநொச்சி.

1185

## 'கைலஞ்சம் வாங்கினீர்'
### கல்வி அமைச்சர் மீது என். எம். குற்றச்சாட்டு

கொழும்பு வெள்ளி. ஆட்சிமன்றத்தில் நேற்று கல்வி அமைச்சர் ஐ. எம். ஆர். ஏ. இரியகொல்லைக்கும், லங்கா சமசமாஜக் கட்சித் தலைவர் டாக்டர் என். எம். பெரேராவுக்குமிடையில் கடும்வாக்குவாதம் இடம்பெற்றது. வார்த்தைகள் மிகவும் காரசாரமாக பரிமாறப்பட்டன.

பேராதனை பல்கலைக்கழக வளவுக்குள் நடந்த இராணுவ வீரர் மாணவர்களிடையேயான மோதலுக்கு இடதுசாரித் தலைவர்களே காரணம் என்று கல்வியமைச்சர் கூறினார். 'இல்லை' என்று உணர்ச்சிவசப்பட்டு டாக்டர் என். எம். சொன்னார்.

''அதற்கேன் இப்படி கோபம் வரவேண்டும்; உண்மை இருப்பதால் தானே இப்படி ஆத்திரப்படுகிறீர்கள்?'' என்றார் ஐ. எம். ஆர். ஏ.

டாக்டர் என். எம்: நீர் ஒரு பொலிஸ்காரராக இருந்தபடியால், உமக்குத்தான் இப்படியான விஷயங்களில் உள்ள தந்திரங்கள் நிறையத் தெரிந்திருக்குமே!

இரியகொல்லை: நான் பொலிஸ் இன்ஸ்பெக்டராக இருந்தது உண்மைதான். ஆனால் நாளந்தா கல்லூரியிலிருந்து பொலிஸ் இன்ஸ்பெக்டரான முதல் மாணவன் நான்தான் என்பதில்பெருமைப்படுகிறேன்.

டாக்டர் என். எம்: கைலஞ்சம் வாங்கியதால்தான் இன்ஸ்பெக்டர் பதவியில் இருந்து வெளியேற்றப்பட்டீர் என்பதும் உண்மைதான்.

இதனைத்தொடர்ந்துகல்வி அமைச்சர் டாக்டர் என். எம். பெரேராவை நோக்கி விடுத்த பாணம் சபையில் பெருத்த பரபரப்பைக் கிளப்பியது.

## பெற்றோருடன் செல்ல் இளம் பெண் மறுப்பு

குரும்பசிட்டி, வெள்ளி. வாலிபர் ஒருவருடன் வீட்டை விட்டு ஓடிப்போனதாகக் கூறப்படும் பதினெட்டு வயது இளம் பெண் பெற்றோருடன் செல்ல மறுத்து சகோதரனுடன் செல்லப் போவதாகத் தெரிவித்தார், மல்லாகம் மாஜிஸ்திரேட் திரு. எம். சண்முகலிங்கம் சண்டிருப்பாயைச் சேர்ந்த அரியகுட்டி சாரதாதேவி என்ற இந்த இளம் பெண்ணை 500 ரூபாய் பிணையில் செல்ல அனுமதித்தார்.

மீண்டும் இம்மாதம் 17ம் திகதி நீதி மன்றத்தில் ஆஜராகும்படி கட்டளையிட்டுள்ளார்.

இரட்சணிய சேனையில் றிமாண்டில் வைக்கப்பட்டிருந்த பிரஸ்தாப யுவதி மீண்டும் நீதிமன்றத்தில் வெள்ளிக்கிழமை ஆஜராகும் போது நீதிபதி பெற்றோருடன் வீடு செல்லுவதற்கு விருப்பமா என வனவியதற்கு மறுப்புக் கூறி தனது சகோதரன் கனகரத்தினத்துடன் செல்லுவதாகத் தெரிவித்ததால் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார்.

சண்டிரும்பாய் வாசியான அரியகுட்டி ளிஜயலட்சுமி என்ற பெண் தனது மகள் சாரதாதேவி காணாமல் போய் விட்டதாக சங்கானைப் பொலிஸில் புகார் செய்யப் பட்டிருந்ததையடுத்து பிரஸ்தாப யுவதி தனது காதலன் செல்வராசாவுடன் வசாவிளானில் வைத்து பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருந்தனர். பொலிஸார் இவர்கள் இருவரையும் நீதிமன்றத்தில் ஆஜர் செய்த போது நீதிபதி இருவரையும் றிமாண்டில் வைத்திருந்தார்.

## மதுபோதையில் குழப்பம்
### சிறைத் தண்டனை பரிசு

குரும்பசிட்டி வெள்ளி. மதுபோதையில் அரசாங்க ஆஸ்பத்திரி நோயாளர்விடுதிக்குள் இரவுநேரம் அத்துமீறி உட்பிரவேசித்து குழப்பம் விளைவித்த நபருக்கு மல்லாகம் நீம்பதி திரு. எம். சண்முகலிங்கம் ஆறுவாரக் கடூழியச் சிறைத் தண்டனை விதித்தார்.

காங்கேசன்துறை அரசினர் ஆஸ்பத்திரி பெண்கள் நோயாளர் விடுதிக்குள் தீபாவளித் தினத்தன்று இரவு அத்துமீறி உட்புகுந்து குழப்பம் விளைவித்ததாக சின்னத்தம்பி கணேசு என்பவர்மேல் காங்கேசன் துறைப் பொலிஸாரால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

வழக்குவிசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது எதிரி சார்பில் ஆஜரான வழக்கறிஞர் எதிரிகுடிவெறியில் இக்குற்றத்தை செய்திருந்ததாக ஒப்புக்கொள்வவாகத் தெரிவித்ததையடுத்து எதிரிக்கு சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

## தீவைப்பு வழக்கில் எதிரிகள் விடுதலை

குரும்பசிட்டி வெள்ளி. குப்பிளான் வீடு தீவைப்பு வழக்கில் ஏழு எதிரிகளையும் விடுதலை செய்து மல்லாகம் மாஜிஸ்திரேட் திரு. எம். சண்முகலிங்கம் வழக்கை தள்ளுபடி செய்தார்.

கடந்தவருடம் யூன்மாதம் 17-ந் திகதி குப்பிளானைச் சேர்ந்த சின்னவன் அருளன் என்பவரின் வீட்டிற்கு நெருப்பு வைத்து சேதம் விளைத்தது என்ற குற்றச்சாட்டில் ஏழுபேருக்கு எதிராக சுன்னாகம் பொலிஸாரால் இவ்வழக்கு தொடரப்பட்டிருந்தது.

வழக்கு விசாரணையின் போது எஸ். அருளன் சாட்சியமளிக்கையில் சம்பவதினம் இரவு 9 மணியளவில் தனது வீட்டுக்கு ஏழு எதிரிகளும்நெருப்பு வைத்து விட்டு ஓடுவதைக் சுண்டதாகவும், பயத்தால் பனைக்கூடலில் ஒளித்திருந்ததாகவும் தெரிவித்தார்.

விசாரணையின் இடையில் பொலிஸார் வழக்கை தொடர்ந்துநடாத்தவிரும்பவில்லையெனக் கூறியதால் வழக்கை நீதிபதி தள்ளுபடி செய்தார்.

1-ம் எதிரி தரப்பில் அட்வக்கேட் கே. வி. எஸ். சண்முகநாதன், 2-ம், 3-ம், 4-ம், 5-ம், 6-ம் எதிரிகள் சார்பில் வழக்கறிஞர் ஆர். ஜே. செல்வரத்தினம், 7-ம் எதிரி சார்பில் அட்வக்கேட் எஸ். தம்பித்துரை ஆகியோர் ஆஜராகினர்.

## மானிப்பாய் பட்டினசபை
### மின்சார பொருட்கள், எழுதுகருவிகள் முதலியன விநியோகம் செய்தல்-1969

மானிப்பாய் பட்டின சபைத்தலைவரால் மேற்கூறிய பொருட்கள் 1969ம் ஆண்டிற்கு விநியோகம் செய்வதற்கு அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் 22-2-69 சனிக்கிழமை பிற்பகல் 3.00 மணிவரையும் ஏற்றுக் கொள்ளப்படும்.

2. இதற்குரிய விண்ணப்பப்பத்திரம், இக்காரியாலயத்தில் ரூபா 30 பிணைப் பணமாக 20-2-69 பிற்பகல் 3.00 மணிவரை செலுத்தி பத்திரங்களை பெற்றுக் கொள்ளலாம். விண்ணப்ப பத்திரத்தின் சார்பாக ரூபா 5.00 திருப்பிக் கொடுக்கப் படமாட்டாது.

3. அரக்கு முத்திரையிடப் படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். கேள்விகள் முழுவதையுமோ அல்லது- ஒரு பகுதியையோ ஏற்கவோ நிராகரிக்கவோ சபையிற்கு பூரண உரிமையுண்டு.

மேலும் விபரங்கள் வேலை நேரங்களில் இக்காரியாலயத்தில் அறிந்து கொள்ளலாம்.

சி. முத்துக்குமாரசாமி,
தலைவர்,
பட்டினசபை,
மானிப்பாய்.

பட்டினசபைக்
காரியாலயம்,
மானிப்பாய். 5.2.69

1184

## 'சிறுபான்மையினர் பிரச்னை' சட்டமூலம் தீர்க்கலாம்
### பிரேமதாசா கூறுகிறார்

உடுப்பிட்டி, வெள்ளி. ''சாதி அடிப்படையில் சிறுபான்மை வகுப்பினருக்கு நேரும் எவ்வித கஷ்டங்களையும் நான் சகிக்க மாட்டேன். இதனைத் தேசிய அரசாங்கம் ஒரு போதும் பொறுக்காது. பிரதமர் டட்லி சேனநாயக்கா நீதியான முறையில் சிறுபான்மை வகுப்பினரின் குறைகளை நீக்க முயன்று வருகின்றார். சிறுபான்மைத் தமிழர்களுக்கு இடையேயுள்ள பிரச்சினைகளைச் சமாதானம், சட்டம்மூலம் தீர்த்துக் கொள்ள முடியும்.''

மேற்கண்டவாறு உள்ளூராட்சி அமைச்சர் திரு. ஆர். பிரேமதாசா துன்னாலையில் அளிக்கப்பட்ட வரவேற்பில் கூறினார். துன்னாலை தெற்கு தயாநிதி சனசமூக நிலையம், கிராமமுன்னேற்றச் சங்கம் ஆகியன அமைச்சர் திரு. பிரேமதாசாவுக்கு மகத்தான வரவேற்பளித்தன.

திரு. பா. தவயோகம் தலைமையில் இவ்வரவேற்பு விழா துன்னாலை கலிகைக் கந்தசாமியார் கோவில் முன்றலில் நடைபெற்றது. பூதத்தம்பி கரகநடனத்துடன் அமைச்சர் வரவேற்கப்பட்டார். மேற்படி சங்கங்களின் செயலாளர் திரு. சி. செல்லையா அமைச்சரிடம் மகஜர் கொடுத்து வரவேற்புரை நிகழ்த்தினார்.

திரு. பிரேமதாசா தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

இன்று தாழ்த்தப்பட்ட மக்கள் தங்கள் உரிமைகளைக் கோரிவருகின்றார்கள். சிலர் இச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் குழப்பத்தைத் தூண்டிவிட முயற்சிக்கின்றனர். சமாதானமாகவும், நல்லெண்ணம் மூலமும் இவ்வித பிரச்னைகளைத் தீர்த்துவைக்க முடியும் என்பது எனது நம்பிக்கையாகும்.

இப்பூமியில் பிறப்பவர்கள் தங்கள் இயல்புக்கு ஏற்பவே வாழவேண்டும். சாதி, இன, மதபேதம் பார்த்து எவரும் உலகில் பிறப்பதில்லை. மனிதரிடையே பிளவுகள் இருப்பது அழகல்ல. நாம் மனிதராகப் பிறந்திருக்கின்றோம். அதுபோல பிறரும் வாழ இடமளிப்பதே மனிதத் தன்மையாகும்.

## கைதிகள் கலங்கினர்
### அண்ணா மறைவினால்

யாழ்ப்பாணம், சனி. பேரறிஞர் அண்ணாவின் மறைவு சிறையுள் இருந்தவர்களையும் கலங்கச் செய்துள்ளது.

அண்ணாவின் பிரிவைக்கேட்டதும் யாழ்ப்பாண சிறையிலுள்ள கைதிகள் பலர் கண் கலங்கி அழுதார்களாம். அதுமட்டுமல்ல தங்களுக்கு வழங்கப்பட்ட உணவை உண்ணவும் அவர்கள் மறுத்து உண்ணாவிரதமிருந்தார்களெனத் தெரியவருகிறது.

இக்கைதிகளில் பலர் அன்று வெளியாகிய செய்திப்பத்திரிகைகளில் வந்த அண்ணாவின் படங்களை வெட்டியெடுத்து வைத்து கண்ணீர் வடித்தார்களாம்.

(தே. நி.)

## 'தமிழுக்கு அர்ப்பணித்தார்'

கோப்பாய், வெள்ளி. தமிழ் வாழ, தமிழ் நாடு வாழ பெருந்தொண்டாற்றியவர் அறிஞர் அண்ணா. தமது உடல், பொருள், ஆவி, அனைத்தையும் தமிழ்த் தொண்டிற்காக அர்ப்பணித்து தனக்கென வாழாப் பிறர்க்குரியாளராகத் திகழ்ந்தார் அவர். எனவே தான் தமிழுலகம் அவரைப் போற்றுகின்றது.''

இவ்வாறு இருபாலை இளைஞர் முன்னேற்றக் குழுவினரால் இருபாலைச் சந்தி மைதானத்தில் நடத்தப்பட்ட அனுதாபக்கூட்டத்தில் உரை நிகழ்த்துகையில் கோப்பாய் எம். பி. திரு. எஸ். கதிரவேலுப்பிள்ளை கூறினார்.

திரு. எஸ். சபாரத்தினம் தலைமையில் நடைபெற்ற மேற்படி கூட்டத்தில் திரு. எஸ். கதிரவேலுப்பிள்ளை மேலும் பேசுகையில், அறிஞர் அண்ணா தம் வாழ்நாளில் ஏழைகளின் தோழனாகவும், சீர்திருத்தவாதியாகவும் திகழ்ந்தார் என்றும் அவர் தமிழ்நாட்டுக்கு மாத்திரமன்றி தமிழ் கூறும் நல்லுலகமனைத்துக்கும் சொந்தமானவரெனவும், அவர் மறைவு தமிழ் மொழிக்கும், தமிழ் மக்களுக்கும், தமிழர் வாழும் நாடுகளுக்கும் ஏற்பட்ட ஒரு பெரு நஷ்டமெனவும் கூறினார்.

## பண்டத்தரிப்பு ...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆகியவற்றிற்கு தங்கள் வருகை நினைவு கூரும்வகையில் சிறப்பு மான்யம்வழங்கி விஸ்தரித்தல்.

மேற் குறிப்பிட்ட அம்சங்களில் முதலாவதான நவீனசந்தைஒன்றைஅமைப்பதற்கு வேண்டிய வசதிகள் செல்துகொடுப்பதற்கான சகல ஏற்பாடுகளும் செய்வதாக வரவேற்புவிழாவிலேயே உறுதிமொழி கூறிய அமைச்சர் பட்டின சபைத்தலைவர் திரு. இ. செல்வரத்தினத்தின் ஆர்வத்தையும் பாராட்டினார்.

## விற்பனைக்கு

நல்லூர் செட்டித்தெருவிலுள்ள 4 பரப்புக் காணி வீட்டுடன் விற்பனைக்குண்டு. விபரங்களுக்குமணியம் ஆட்டிஸ்ற் 23, செட்டித்தெரு. நல்லூர் என்ற முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.

666

## மரண அறிவித்தல்
### எஸ். சி. கதிரவேலு

யாழ்ப்பாணம் பிரபல வழக்கறிஞர்திரு. எஸ். சி. கதிரவேலு. ஜே. பி. யு. எம், அவர்கள் சிவபதமடைந்துவிட்டார். இவர் இராசம்மாவின் கணவரும் உருத்திரன், இந்திரன், வசந்தா ஆகியோரின் தந்தையுமாவார். அன்னாரின் பூதவுடல் ஈமக்கிரிகைக்காக கோம்பையன்மணல் மயானத்துக்கு இன்று மாலை 4 மணியளவில் அவரது இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்படும்.

இரத்தினவில்லா கந்தர் மடம் யாழ்ப்பாணம்.

665

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி 1ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில்1969-ம் ஆண்டு பெப்ரவரிமாதம் 8-ந்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org